# செல்வச்சந்நிதி தேர்த்திறன்



வே. அம்பிகைபாகன் B.A (Hons)

# செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா

இத்துறையில்
இது
முதல் முயற்சி

# செல்வச்சந்நிதி தேர்த்திறன்

வே. அம்பிகைபாகன், B.A. (Hons)

வெளியீடு
காங்கேயன் கலைக்கோட்டம்,
06, போக்காலை வீதி, உடுப்பிட்டி
இலங்கை.

# Celvaccanniti therththiran
## (A Study of Celvaccanniti Chariot)

V. Ambigaipagan, B.A.(Hons)

© Author

First Published May 2001

# செல்வச்சந்நிதி தேர்த்திறன்

வே. அம்பிகைபாகன் ,B.A(Hons)


விடயம் : தேர்ச்சிற்பக்கலைத்திறனாய்வு

பதிப்புரிமை : நூலாசிரியர்

முதற்பதிப்பு : வைகாசி 2001

வெளியீடு : **காங்கேயன் கலைக்கோட்டம்**
06, போக்காலை வீதி, உடுப்பிட்டி
இலங்கை

விலை : ரூ.300.00

அச்சுப்பதிப்பு : அகதிகள் புனர்வாழ்வு கணனி பயிற்சி நிலையம்
106,4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

அட்டை அமைப்பு : நூலாசிரியர்

# ஆசியுரை

வி.தெய்வேந்திர ஐயர்
தலைமைக்குரு,
*தொண்டமானாறு*

சைவ ஆலயங்களில் மகோற்சவத்தில் தேர் உற்சவம் சிறப்பாகக் கருதப்படுவதும் அடியார்கட்கு பக்திப் பிரவாகப் பெருக்கு ஏற்படுவதும் குறிப்பிடும் விடயமாக அமைகின்றது. ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்திலும் தேர் உற்சவம் பலபாக சைவ அடியார்களின் போற்றுதலுக்குரிய நிகழ்வாக அமைவது தொன்று தொட்டு வரும் மரபாக உள்ளது. ஆலயங்களில் அக்காலங்களில் கட்டுத்தேர் உருவாக்கப்பட்டு உற்சவம் நிகழ்ந்ததும் நாளடைவில் காலச் சூழ்நிலை மாற்றத்தால் சித்திரத்தேர்கள் உருவாகி வந்தன. சித்திரத் தேர்கள் உருவாகியதால் அவ்வாலயம் புராதன மகிமைகள் சைவமரபுகள் சரித்திர சம்பவங்கள் சித்திரமாக்கப்பட்டு மிளிர்ந்தமையால் அவை எக்காலத்திலும் நினைவூட்டலாக அமைந்து போற்றுதலுக்கு உரியதாகி வந்தது.

பழைமையும் புராதன மகிமையும் கொண்ட ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் உருவான சித்திரதேர் அடியார்களின் பெரும் பங்களிப்புகளும் சித்திரத்தேருக்கான பல அம்சங்களும் இடம்பெற்று மிக இலட்சணமாக உருவானது.

இச்சித்திரத்தேர்ப்பணி ஆரம்ப காலத்தில் நல் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டு நாளடைவில் நோக்கம் மாறுபட்டு பழைமைக்கு மாறான பல செயற்பாடுகள் அமைந்து பல கஷ்டங்கள் மத்தியில் ஏனோதானோ என்ற நிலையில் உருவானது உண்மையே. எம்பெருமான் அநுக்கிரகம் எப்படி ஆகுமோ என்ற எண்ணமின்றி உருவான இத்தேர் இருவருடங்களில் அழிக்கப்பட்டது அனைவருக்கும் மிக்க கவலையே. இக்கவலையின் உந்துதலே இந்நூல் என்றால் கூட மிகையாகாது. சைவ மக்கள் அனைவராலும் ஜீரணிக்க முடியாத சோக நிகழ்வானது.

இந் நூலினை உருவாக்கிய அன்பர் திரு.வே.அம்பிகைபாகன் அவர்கள் தனது பல்வகை ஆய்வுகளையும் மிக்க சிரமத்துடன் ஆய்ந்து பாங்குடன் வெளிப்படுத்த முனைந்த முயற்சி பாராட்டுதலுக்குரியது, குறிப்பாக இவரது ஆய்வில் இவரது மனச்சோர்வு ஆதங்கம் வெளிப்படுதலை நாம் உணரமுடிகிறது. இவர் போன்று எண்ணற்ற பலரும் திகைத்து நிற்கையில் துணிந்து மனமுருகி நொந்து நோக்கிக் காணிக்கையாக்குவது மிக்க நெகிழ்வாகின்றது. பெரு முயற்சி கொண்டு இம்மலரால் அர்ச்சிப்பதாலும் அதே வேளை எதிர்காலத்தில் இவ்வாறான இன்னல்கள் எவருக்கும் ஏற்படாதிருக்கவும் எம்பெருமானை வேண்டுதல் செய்து இம்மலர் எல்லோர் எண்ணங்களிலும் நல்மணங்கொண்ட வாடாமலராக மலர இறையருள் கொண்டு வாழ்த்துகின்றேன்.

13.02.2001

வி. தெய்வேந்திர ஐயர்

# வாழ்த்துரை

அருட்கவி சீ.வினாசித்தம்பி அவர்கள்
*தலைவர்,இந்து சமயப் பேரவை,*
*அறங்காவலர், நாகவரத நாராயணன் தேவஸ்தானம்,*
*அளவெட்டி.*

நிலைபெறு சிவாகமங்கள்
நிறைந்திடு தத்துவங்கள்
தலைசிறந் தமையும் வண்ணம்
சந்நிதி வேலன் ஏறும்
கலைதரும் தேரை ஞானக்
கவினுயர் சிற்ப வல்லோர்
சிலைநிகர் எழுபார் தேரை
சிருட்டித்தார் தேவர் போற்றி

மும்மல மறுப்பதற்கு
முக்கண்ணன் இரதத்தேறி
எம்மையே இனிதுகாக்க
ஏறுவான் ஞானத் தேரில்
செம்மல ரொத்த ரூபன்
செல்வச் சந்நிதி வாழ்வேதன்
எம்மிடர் தீர்ப்பதற்காய்
ஏறினார் ஏழ்பார் தேரில்

VIII

போற்றி குமரக் கந்தன்
பொலிதர வீதியெல்லாம்
சாற்றிடும் தொண்டர் சூழ
தரணமா வீதி வந்து
வீற்றொடு சிவ சிறக்க
நீடருள் புரிந்தான் மேவும்
கூற்றெனும் கொடியர் தேரை
கொளுத்தினார் தமிழர் நோக

நவமணி பஞ்சலோகம்
நாகத்தின் ரத்தினங்கள்
திவளுயர் பரவை முத்து
சேர்ந்துநன் கிழைத்த தேரில்
புவனமா தியரெல்லாரும்
போற்றிக் கந்தன் வந்தான்
கவினுயர் அந்தத் தேரைக்
கண்டிலோம் கண்ணீர்விட்டோம்.

குருநாதன் பவனிவந்த
கொடிமணி நெடிய தேரை
வருதீயர் எரித்த போதும்
வள்ளலாம் செல்வக் கந்தன்
பெருவாரித் தொண்டர் சூழ
பிரணவ குருக்களாகி
வருவாரா வணியில் மக்கள்

IX

மனங்குளிர்ந் துவக்கும் ஓர்தேர்
பனியெனும் வாழ்க்கைத் தேரைப்
பற்றி நாம் துயருறாமல்
தனிமணித் தேரில் செல்வச்
சந்நிதி வேலன் ஏறி
இனியன நமக்கு நல்க
இரத்தினத் தேரொன்றாக்கி
கனிதரு கந்தன் காட்சி
காணுவோம் வாரீர் வாரீர்

எத்தனை துயர் வந்தாலும்
எந்தை வேள் ஏறி எங்கள்
சித்தத்தில் வீற்றிருக்க
செப்பிய விதியின் வண்ணம்
உ த்தமன் அம் பிகைபாகன் நூல்
உரைத்த மெய்த் திறத்தின் வண்ணம்
தத்துவத் தேர் அமைப்போம்
சண்முகன் அருள்பெற்றுய்வோம்.

தேர்வளர் சிறப்பனைத்தும்
சிந்தனை அம்பிகைபாகன், வேல்
பேர்வளர் விளக்கந் தந்தார்
பிரகாசக் கந்தன் கீர்த்தி
பார்வளர் வரம்பு ரைத்தார்
பற்றுயர் அன்னார் சேவை
நீர்வளர் இமயம் போல
நிறைபயன் செழித்து வாழி

10/03/2001 அருட்கவி சீ.விநாசித்தம்பி

# அறிமுகவுரை

கொழும்பு-11
இலங்கை.
28.06.1993.

பேராசிரியர்
கா. கைலாசநாதக்குருக்கள்,

M.A..இலங்கை, Ph.d (பூனே)

இயக்குநர் ,

ஸ்ரீமுத்துவிநாயகர் வேதாகம ஆராய்ச்சி நிறுவனம்,

ஸ்ரீமுத்துவிநாயகர் குருகுலமும் வேதாகம பாடசாலையும்.

தொலைபேசி- 43847.

திரு.வேலுப்பிள்ளை அம்பிகைபாகனை ஏழு ஆண்டுகளுக்கு மேலாக நான் நன்கு அறிந்திருக்கின்றேன். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே கல்வி பயின்ற காலப்பகுதியின் முதற் கட்டத்திலே யான் இந்து நாகரிகப் பேராசிரியராகப் பணிபுரிந்தேன். இக்காலத்தில் இவர் மிகுந்த மதிநுட்பமும், கடின உழைப்பும் கொண்ட திறமையுள்ள மாணவன் என்பதை அறியும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இவர் இந்து நுண்கலைகளில் குறிப்பாக இந்து சிற்பத்திலே உண்மையான ஈடுபாடு கொண்டிருந்தமை தெளிவாயிற்று. பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகப்பாடத்திட்டத்தில் இந்து நுண்கலைகள் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. சிற்பங்கள் பற்றிய அமிசங்களைக் கற்பித்த போது இவர் காட்டிய ஆர்வம் வலுவாகவும் பதியக் கூடியதாகவும் விளங்கிற்று.

இப்பொழுது இவர் மேற்பட்டப்படிப்பினைத் தொடர்வதற்கு இந்தியாவிற்கு செல்லவிருப்பதாக அறிகின்றேன். அங்கு இவர் இந்து சமயத்துடன் தொடர்புள்ள மேற்குறிப்பிட்ட நுண்கலையின் பகுதிக்குரிய நுணுக்கங்கள் பற்றிச் சிறப்பாகக் கவனம் செலுத்துவார். திரு.அம்பிகைபாகன் இக்கலைத்துறையில் ஓர் ஆரம்ப கர்த்தா ஆவர். இத்தகைய அறிவைத் தேடுகின்ற முதலாவது பட்டதாரி இவரே.

இது தொடர்பாக இவர் இந்தியா சென்று மஹாபலிபுரத்திலே மேலும் கற்பதைத் தொடர்வதற்கு இவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமெனச் சிபார்சு செய்கின்றேன். மேற்குறிப்பிட்ட கலைக்கான செயல்முறையையும், அறிமுறையையும் புகட்டுவதில் மஹாபலிபுரத்திலுள்ள கலைக் கல்லூரி புகழ் பெற்றதாகும்.

திரு.வே.அம்பிகைபாகன் சிறந்த நல்லொழுக்கமும் பண்புமுள்ளவர். இவரது புதிய முயற்சி வெற்றி பெற வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

கா. கைலாசநாதக் குருக்கள்.

# அணிந்துரை

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணத்திலே தொண்டைமானாறு என்ற இடத்தில் கோயில் கொண்டெழுந்து அருள்பாலிக்கின்ற செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் ஈழத்து முருகன் ஆலயங்களின் வரிசையில் தனக்கென சிறப்பானதோர் வரலாற்றுப் பாரம்பரியத்தையும் வழிபாட்டுச் சிறப்பினையும் கொண்டுள்ளது. அத்துடன் பக்தர்களின் பக்தி பூர்வமான ஈடுபாட்டிற்குரிய ஆலயமாகவும் விளங்கி வருகின்றது.

இந்த ஆலயத்தினுடைய வரலாற்றிலே ஒரு முக்கிய அம்சமாக அமைந்தது 1984 ஆம் ஆண்டு முருகனுக்கு அமைக்கப்பட்ட சித்திரத் தேராகும். இத்தேர் உருவாக்கப்பட்ட காலமும் வெள்ளோட்டம் நடைபெற்ற காலமும் மற்றும் மகோற்சவத்தின் போது பயன் படுத்தப்பட்ட காலமும் இவ் ஆலய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெறுவதாகும்.

இப்பிரதேசத்திலே இரு தசாப்தகாலமாக இடம்பெற்று வருகின்ற யுத்த சூழ்நிலையிலேயே இந்தக் கலைப்படைப்பு இடம் பெற்றுள்ளது. இந்த வரலாற்றுப் பெருமை பெற்ற உன்னதமான தேரைப்பற்றி 'செல்வச் சந்நிதி தேர்த்திறன்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிக சிறப்பு பட்டதாரியும் எனது மாணவனும் மற்றும் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் செயற்திட்ட அலுவலராகப் பணி புரிபவரும் ஆகிய திரு.வே.அம்பிகைபாகன் இந்நூலை உருவாக்கியுள்ளார். காங்கேயன் கலைக்கோட்டம் இந்நூலினை வெளியிடுகின்றது.

இந்நூலாசிரியர் தேர்க்கலையிலே கொண்டிருக்கும் ஆழ்ந்த ஈடுபாடு காரணமாக முதுதத்துவமாணிப் பட்டத்திற்கு இத்துறையில் ஆராய்ந்து வருகின்றார்.

மேலும் தேரோவியக் கலையில் ஒரு திருப்புமுனையாக அமைந்ததும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்லாது இலங்கையிலேயே மிகப் பெரியதுமாகப் போற்றப்பட்டது மாகிய செல்வச்சந்நிதி தேரைப் பற்றிய பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக இந்நூல் அமைகின்றது. இத்தேர் . எரியூட்டப்படுவதற்கு முன்பாகவே தேரினை நேரே தரிசித்தது மாத்திரமன்றி அது உருவாகும் காலத்திலும் நூலாசிரியர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால் இத்தேரைப் பற்றிப் பின்வரும் தலைப்புக்களில் விரிவாக ஆராயும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார்.

நூலின் தோற்றுவாயாக அமையும் பொது அறிமுகத்திலே செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்து விளங்கும் தொண்டைமானாறு பற்றிய வரலாற்றினையும் இரண்டாவது இயலில் "செல்வச்சந்நிதி தேர் அமைக்கப்பட்ட வரலாறு" பற்றியும் மூன்றாம் இயலில் "தேர்க்கலை" பற்றியும் நான்காம் இயலில் "தேர்ச்சிற்பம்" பற்றியும் ஐந்தாம் இயலில் "தேர் ஓவியம்" பற்றியும் ஆறாம் இயலில் "தேர்நிர்மாணத்தில் ஈடுபட்ட கலைஞர்கள்" பற்றியும் இந்நூலிலே ஆசிரியர் விமர்சனக் கண்ணோட்டத்திலே எடுத்துக் காட்டுகின்றார். அவரது பார்வையில் தமிழக– யாழ்ப்பாண கலைப் பாணியின் சிறப்பியல்புகள் எடுத்து விளக்கப்படுகின்றது. கலைத்துறை சார்ந்தவர்களுக்கும் இவ்வாலய தேரைப்பற்றி அறிய விரும்புகின்றவர்களுக்கும் எளிதாக விளங்கும் நடையில் நூலாசிரியர் இந்நூலினை எழுதியிருப்பது பாராட்டத்தக்கதாகும். அத்துடன் இத்தேர் 1981 இல் நிர்மாணிக்கப்பட்ட காலம் தொடங்கி நான்காண்டு காலமாக உருவாக்கப்பட்டதோடு 1984இல் வெள்ளோட்டம் கண்டு 1986 இல் தீக்கிரையாக்கப் பட்டமை பற்றியும் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். ஏழாம் இயலில் "எரியூட்டல்" என்ற தலைப்பில் இது தொடர்பான விபரங்கள் கூறப்படுகின்றன. மேலும் "வரலாற்றில் செல்வச் சந்நிதி தேர்: ஆய்வும் மதிப்பீடும்" என்ற தலைப்பில் எமது பிரதேசத்து கலை வரலாற்றினை ஆவணப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குருசிஷ்ய பாரம்பரியத்திலே உருவாகி வருகின்ற இக்கலை மரபு பற்றிய ஒரு விமர்சன நோக்கில் அமைந்த இந்நூலானது ஈழத்து கலை வரலாற்றில் ஒரு பரிமாணத்தை அறிவதற்கு உதவியாக அமைகின்றது.

இந்நூலில் நாம் காணும் மற்றோர் அம்சம் யாதெனில் தீக்கிரையாகிய இத்தேரின் வர்ண நிழற் படங்கள் இந்நூலின் இறுதியிலே தொகுத்து தரப்பட்டுள்ளமை ஆகும். மற்றும் இந்நூலை உருவாக்குவதற்குத் துணை செய்த நூலின் பட்டியலும் இடம்பெறுகின்றது. செல்வச்சந்நிதி தேர் இலங்கை-தமிழகக் கலை வரலாற்றில் ஓர் உயரிய கலை முகிழ்ப்பாகக் கொண்டு இந்நூலை உருவாக்கிய இந்நூலின் ஆசிரியரைப் பாராட்டுவதோடு கலையுலகம் இந்நூலினை உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலில் இடம்பெற்றுள்ள கலைஞர் பற்றிய விபரங்கள் எமது நாட்டில் இக்கலையில் ஈடுபாடு கொண்ட கலைஞர்கள் பற்றிய அறிமுகமாகவும் வரலாறாகவும் உள்ளது.

இந்நூலாசிரியர் திரு. வே. அம்பிகைபாகன் இத்துறையில் மேன்மேலும் ஆர்வமுடன் ஆய்வுகள் செய்து நல்ல பல நூல்களை எழுதி வெளியிட்டு அரும்பணியாற்றுவதற்கு எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி முருகன் திருவருள் பொழிய வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு இவ்வாலயத்தில் இவ்விழப்பினை ஈடுசெய்யும் வகையில் மற்றோர் சிறந்ததொரு சிற்பத்தேர் உருவாவதற்கு இந்நூல் வழிகாட்டியாக அமைய வேண்டுமென்று வாழ்த்தி எனது நல்ல ஆசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்.

24.04.2001

# சிறப்புரை

**திரு. பரராஜசிங்கம் கணேசலிங்கம்** (M.Phil),
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இந்துப்பண்பாட்டு மரபிலே கலைகள் திருக்கோயில்களை மையப்படுத்தியே இந்தியாவிலும் இலங்கையிலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் வளர்ந்து வந்ததையும் தற்பொழுதும் வளர்ந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இலங்கையில் புராதனமானதும் பிரசித்தி பெற்றதுமான பல இந்து ஆலயங்கள் விளங்குகின்றன. இவ்வாலயங்கள் பல்வேறு விதமான கலைச் சிறப்புக்களுடன் விளங்கின. அவ்வாலயங்களில் பேணப்பட்ட கலை மரபுகளுள் தேர்க்கலை மரபு தனித்துவமான ஒன்றாகும்.

அண்மைக்காலப் போர்ச்சூழல் காரணமாக இந்துக்களது பண்பாட்டுச் சின்னங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில் திரு.வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் அவர்களது இத்தகைய நூல் முயற்சி காலத்தின் தேவையினை பூர்த்தி செய்வதாக அமைகின்றது.

இந்நூலாசிரியர் விஸ்வகர்ம குலத்தைச் சார்ந்தவர். இவர் பல்துறைப் புலமையாளர். சிறப்பாக இந்துக்கலை மரபு நுட்பங்களை நன்கு ஆராய்ந்து வருபவர். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமரர், பேராசிரியர், இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ. கா.கைலாசநாதக்குருக்கள்,பேராசிரியர்.ப.கோபாலகிருஷ்ண ஐயர் ( அகில இலங்கைச் சமாதான நீதிவான்.) அவர்கள் ஆகியோர்களிடமும் மற்றும் பல்துறை சார்ந்த பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆகியோர்களிடமும் கல்வி கற்றவர்.

இந்நூலாசிரியர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையில்

சிறப்புப்பட்டத்தைப் பெற்ற இவர், அதே துறையில் உதவி விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர். தற்பொழுது வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் முறைசாராக்கல்வி செயல் திட்ட அலுவலராகப் பணியாற்றி வருகின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முது தத்துவமாணி (M.Phil) பட்டத்திற்காக யாழ்ப்பாணத்து இந்து ஆலய தேர்ச்சிற்பங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து வருபவர். **"கலாகேசரியும் தேர்ச்சிற்பக் கலையும்**'(1994), **முறைசாராக் கல்வியில் புதிய பயிற்சி நெறிகளை அறிமுகம் செய்தல்: ஓர் எண்ணக்கரு** (1999), **கலாகேசரி ஆ.தம்பித்துரை** (2000) ஆகிய நூல்களை வெளியீடு செய்துள்ள இவரின் நான்காவது நூலே **செல்வச்சந்நிதி தேர்த்திறன்** ஆகும். செல்வச்சந்நிதி எழில் மிகு சித்திரத் தேரின் அமைப்பினை இந்நூல் விபரிக்கின்றது.

தமிழில் தனித்தேர் ஒன்று பற்றிய முதலாவது நூல் இதுவாகும். இந்து *விக்கிரகவியல், தெய்வீகவியல், சிற்பக்கலை, கோயில் கட்டிடக்கலை, நாடகக்கலை* போன்றவற்றில் அதிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட இவர் சக்தியின் வடிவங்கள் என்னும் சிறந்ததோர் ஆய்வு நூலினை அடுத்து வெளியிடவுள்ளார்.

இந்துக்கலை ஆய்வுலகில் கலாயோகி ஆனந்தக் குமாரசாமி, கலைப்புலவர்.க.நவரத்தினம், கலாகேசரி ஆ. தம்பித்துரை ஆகியோரைத் தொடர்ந்து இலங்கை எழுத்துத் துறையில் பெயர் சொல்லத்தக்க பன்முகக் கலைஞனாக இந்நூலாசிரியர் விளங்குகின்றார் என்பதற்கு இந்நூல் ஒன்றே போதுமானதாகும். நூலாசிரியர் மேலும் இந்நூலாய்வு முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு உழைத்து இலங்கைத் திருநாட்டின் கலைப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அரும் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு.பரராஜசிங்கம் கணேசலிங்கம்**

24.3.2001

# என்னுரை

தமிழில் கலை வரலாற்று ஆய்வாளர்களால் பெரிதும் கவனிக்கப்படாததோர் துறையாக சிற்பக்கலை இருந்து வருவது யாவரும் அறிந்ததொன்றே. தமிழ்க் கலையறிஞர்களால் இலக்கிய விமர்சனமும் நவீன சிற்ப ஓவியங்களும் கவனிக்கப்பட்ட அளவிற்கு மரபு நிலைப்பட்ட கோவிற் கட்டட, சிற்ப, ஓவியக் கலைகள் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்பது கசப்பானதோர் உண்மையாகும். இதற்கு ஆழ, அகலமான கல்விப் பயிற்சியும் கடின உழைப்பும் தேவைப்படும்.

இந்நிலையில் சிற்ப இலக்கண அறிவுத்தளத்தில் வரலாற்று ஒப்பியல் அணுகு முறைகளைத் தக்கவாறு பயன்படுத்தி வெளிவரும் இந்நூல் தனித்தேர் ஒன்று பற்றிய திறனாய்வு நோக்கிலான முதல் நூல் என்னும் சிறப்பினைப் பெறுகின்றது. இவ்வகையில் இந்நூல் பல குறைபாடுகளையும் கொண்டிருப்பதற்கான வாய்ப்பு இயல்பாகவே உள்ளது.

1993ம் ஆண்டில் கலைப்பயணம் ஒன்றினை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த போது தமிழகத்தில் தேவ கோட்டையில் சந்நிதி தேர் ஸ்தபதி சோம.லெட்சுமணன் அவர்களை 23/08/1993ல் சந்திக்கும் வாய்ப்புக்கிட்டியது. சந்நிதித் தேர் எரியூட்டப்பெற்றமை பற்றியும் அது தொடர்பான யாழ் அறிஞர்குழாம், பக்தர் குழாத்தினர் கருத்துக்கள் பற்றியும் அவருடன் விரிவாகக் கவந்துரையாடப்பட்டது. 'அளவுப் பிரமாணம் பிழைத்ததே தேர் எரிவுக்குக் காரணம்' என்ற தொனி அதில் இருப்பதனை யான் சுட்டிக்காட்ட "இதைச் சொல்வதற்காகவோ யாழ்ப்பாணத்திலை இருந்து இந்தியாவுக்கு வந்தீர்கள்?" என்று அவர் பகிடியாக எதிர்க் கேள்விகேட்டார். இது பல வகையிலும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றே.

'இலங்கையிலேயே மிகப் பிரம்மாண்டமாகத் தேர் செய்யப்பட வேண்டும்' என்ற சபையினரின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற இக்கட்டில் பிரமாணத்தை விதி விலக்குகளின் வழி சென்று அணுக வேண்டியதாயிற்று. இந்நிலையில் புதியதோர் பிரமாணத்தைக் கையாளும் நிலைமை தோற்றம் பெறுகின்றது. ஆயினும் என்னைப் பொறுத்தளவில் ஆகம விதிமுறை சாராத மடாலயமுருகனுக்கு சிற்பப் பிரமாணத்தினைக் கையாளவேண்டு மென்பதோ அல்லது அதை மீறவேண்டுமென்பதோ அப்படி ஒன்றும் தவறன்று என்பேன். இவ்வகையில் யான் சிற்ப இலக்கண வழியில் தான் நிற்கமுடியும்

போர்த்துக்கேய, ஒல்லாந்த காலகட்டங்களில் எத்தனையோ நூற்றுக்கணக்கான ஆலயங்கள் யாவும் இருந்த இடமும் தெரியாது தரைமட்டமாக்கப்பட்ட வரலாறு கூட, 'ஆகம சிற்பக் குறைபாடு' என்ற சிந்தனையில் மூழ்கடிக்கப்படலாம். ஆயின் அவ்வாறு நோக்க முடியுமா என்பது பிரதான கேள்வி. இருபதாம் நூற்றாண்டு இலங்கை இந்துக் கலை வரலாற்றிலேயே மிகவும் ஆர்ப்பாட்டமானதோர் திருப்பணியாக நடைபெற்று மக்கள் மனதில் இடம் பிடித்திருந்த இந்துப் பண்பாட்டுக் கருவூலம் அவைதிக நெறியினரால் அழிக்கப்பட்டது என்பதே வரலாற்றின் அடியாக நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய உண்மை

சிற்பக் கலை ஆய்வில் ஈடுபட்டு வரும் யான் தேர் இலக்கணக் கோட்பாடு ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் என்னை ஈடுபடுத்தி உள்ளேன். ஆலோசனைக்காக என்னை நாடிவரும் இளைய ஸ்தபதிகளுக்கும் ஆலய நிர்வாகத்தினர்க்கும் வழிகாட்டி நிற்க வேண்டியதோர் வரலாற்று நிர்ப்பந்தம் எனக்குளது. அதனைச் செம்மையுறச் செய்ய வேண்டுமென்பதே என் அவாவும்கூட.

'மரம் மேல் மரம் அடுக்கி அது விழுந்திடாது கம்பி ஆணி தைத்தும் ஸ்குரூ பூட்டியும் சுவாமி சரிந்திடாமல் பக்குவமாக என்றாலும் வந்து சேரவேண்டும் என்பதற்காக அதிக கவனம் எடுத்து உருப்படியாக்கும்

ஓர் தொழிலே தேர்க்கலை' என்றளவில் மட்டுமே இத்துறை யாழ்ப்பாணத்தில் பெரும்பாலும் கையாளப்பட்டு வருகின்றமை பலராலும் அவதானிக்கப்பட்டுள்ளது. இது வருந்தக் கூடியது. வெள்ளோட்ட விழாவில் கலந்து கொள்ளும் அறிஞர்களும் கூட சஹஸ்ரநாமதுதி செய்து, "விஸ்வகர்மா எங்கே, எமது ஸ்தபதி எங்கே?" என்று சொல்லுமளவிற்கு எமது அறிவுத்தளம் அடிமட்டத்திற்கு சென்று விட்டது.

உண்மையில் "ஸ்தபதி அல்லது சிற்பி என்பவன் சிற்ப இலக்கண ஆராய்ச்சி செய்பவனாக இருத்தல் வேண்டும்" என்பது சிற்ப நூல் கொள்கை. சரி யாழ்ப்பாணத்தில் எங்கே என்றுதான் கண்டு பிடியுங்களேன் .....! இந்நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் இந்தியத் தமிழகத் தேர்க்கலை வளர்ந்துள்ளமை கவனத்திற்குரியதாகின்றது. நீண்ட காலக் குருகுலப் பயிற்சியும் சிற்ப ஆராய்ச்சியும் அதன் அடிப்படை. அப்பரிணமிப்பில் உருவாகியதே செல்வச்சந்நிதி முருகன் தேர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலிற்கு ஆசியுரை வழங்கிய செல்வச்சந்நிதி பிரதம குரு திரு. தெய்வேந்திர ஐயரவர்கள், வாழ்த்துரை வழங்கிய அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயா அவர்கள், இந்து விக்கிரகவியல் பயிற்றியும் அணிந்துரை வழங்கியும் என்னை நெறிப்படுத்தும் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரவர்கள், சிறப்புரை வழங்கிய திரு.ப. கணேசலிங்கம் ஆகியோர்க்கு என் நன்றிகள் பல.

அமரத்துவம் பெற்ற எமது பேராசான் உலகின் முதல் இந்துநாகரிகப் பேராசிரியர், கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் 1993இல் எனக்கு வழங்கியுதவிய நற்சான்றிதழ் ஒன்றினை அறிமுகவுரையாக இங்கு சேர்த்துக் கொண்டுள்ளேன். ஆங்கிலத்தில் அமைந்த அச்சான்றிதழைத் தமிழில் மொழி பெயர்த்துதவிய யாழ் பல்கலைக்கழக முன்னை நாள் சமஸ்கிருதப் பேராசிரியர் திரு.வி. சிவசாமி அவர்களுக்கு நன்றியுடையேன்.

நூலினை ஒப்செற் (Off Set ) முறையில் அச்சேற்றிய யாழ். அகதிகள் புனர் வாழ்வு கணனிப் பயிற்சி நிலையத்தினருக்கு எனது நன்றிகள்.

வே.அம்பிகைபாகன்

24/04/2001

# உள்முகம்


ஆசியுரை......... V
வாழ்த்துரை......... VII
அறிமுகவுரை ......... X
அணிந்துரை......... XII

சிறப்புரை.......... XV
என்னுரை....... XVII
உள்முகம்....... XX
சமர்ப்பணவுரை ....... XXI

ஆய்வும் அமைப்பும். 01

1. பொது அறிமுகம் 05
2. வரலாற்றுப் பின்னணி 12
3. தேர்க்கலை 16
4. தேர்ச்சிற்பம் 21
5. தேரோவியம் 29
6. கலைஞர்கள் 32
7. எரியூட்டல் 37
8. வரலாற்றில் சந்நிதி முருகன்தேர்: ஆய்வும் மதிப்பீடும் 39

நிறைமுகம். 44


## இணைப்பு


1. படங்களின் விபரப்பட்டியல் 47
2. துணைநூற் பட்டியல் 51
3. படங்கள் I-XXX

அமரத்துவம் பெற்ற எமது பேராசான்
உலகின் முதல் இந்துநாகரிகப் பேராசிரியர்
கலாநிதி கா.கைலாசநாதக் குருக்கள்
அவர்களுக்கு

# ஆய்வும் அமைப்பும்

எரியூட்டல் பெற்ற தேர் ஒன்றின் வரலாற்றினை ஆய்வு பூர்வமாக வெளிப்படுத்த முனையும் இந்நூல் ஆய்வறிவாளர் பலருக்கும் வியப்பினைத் தரும் அதேவேளை அதி நகைப்பிற்கிடமாகவும் அமையுமென்பது எமக்குத் தெரிந்ததொன்றே. இவ்வறிமுக ஆய்வு நூலின் உருவாக்கத்திற்கு "யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆலயங்களில் தேர் : ஓர் ஆய்வு" என்ற எனது சிறப்புப்பட்டப் படிப்பிற்கான ஆய்வுரை ஆதாரமாகும். இதில் 'தேர்', 'சிற்பம்', 'ஓவியம்', என்னும் மூன்று இயல்களிலும் இடம்பெற்ற செல்வச்சந்நிதி முருகன் தேர் பற்றிய பகுதிகளின் ஒழுங்கமைவில் இந்நூல் தோற்றம் பெறுகின்றதென்னும் உண்மையினை முதலிற் சொல்ல வேண்டியது அவசியமாகும்.

முதலாம் இயல் 'பொது அறிமுகம்' நூலின் தோற்றுவாயாகும். செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் அமைவிடத்தினை விளக்கி அது அமைந்துள்ள தொண்டைமானாற்றுக் கிராம வரலாற்றினை விரிவாக ஆராய்கிறது. அப்பின்னணியில் 'செல்வச்சந்நிதி' சொற் பொருள் விளக்கம் செய்யப்படுகின்றது. இறுதியாக ஆலய வரலாறு சுருக்கமாக விபரிக்கப்படுகின்றது.

இரண்டாம் இயல் 'வரலாற்றுப் பின்னணி', சந்நிதி முருகன் தேர் அமைப்பு முயற்சி பற்றி விபரிக்கின்றது. தமிழக – யாழ்ப்பாணக் கலைஞர்களின் இணைந்த பணிகள் புதியதோர் எழுச்சியினை ஏற்படுத்தியமை பற்றி இவ்வியல் கூறும்.

மூன்றாம் இயல் 'தேர்க்கலை', செல்வச்சந்நிதி முருகன் தேர்க்கலை அமைப்பினை ஆராய்கின்றது. தமிழக – யாழ்ப்பாணக் கலைப்பாணிகள் கொண்டு மிளிரும் சிறப்பியல்புகளின் இணைவில் சந்நிதி முருகன் தேர் புதிய பரிமாண-பரிணாமமாக மிளிரும் சிறப்பு விபரிக்கப்படுகின்றது.

நான்காம் இயல் 'தேர்ச்சிற்பம்', செல்வச்சந்நிதி முருகன் தேர்ச்சிற்பங்கள் பற்றி நுணுகி ஆராய்கிறது. தமிழக பாணியில் யாழ்ப்பாணத்திற்கு ஏற்கனவே அறிமுகமாகியிருந்த கலைமரபுகளின் சங்கமம், தமிழகமே கண்டிராத கலைக்களஞ்சியமாக சந்நிதி முருகன் தேர்ச் சிற்பங்களை உருவாக்கிய உண்மையினை இவ்வியல் எடுத்துரைக்கின்றது.

ஐந்தாம் இயல் 'தேரோவியம்', சந்நிதி தேரோவியம் பற்றி ஆராய்கின்றது. ஓவியக் கலையின் பரிணாம, பரிமாண வெளிப்பாடுகளை இவ்வியல் எளிமையாக விளக்கிச் செல்கின்றது.

ஆறாம் இயல் 'கலைஞர்கள்', தேர் நிர்மாணப் பணியில் ஈடுபட்ட கலைஞர்கள் பற்றிய அறிமுகமாகும். ஒவ்வொருவரினதும் தனித்திறன்கள் ஏற்கனவே செய்த பணிகள் பற்றி இது கூறும்.

ஏழாம் இயல் 'எரியூட்டல்', இலங்கை இந்து வரலாற்றில் கலையழிவுக் கொள்கையின் இறுதிப் பெரும் நிகழ்வாகிய 'செல்வத் தேர்' எரியூட்டல் பெற்ற நிகழ்வினை விபரிக்கின்றது. இவ்வெரியூட்டல், யாழ்ப்பாணத்து இந்துக்கள் மத்தியில் எத்தகைய பெரும் வடுவாக விளங்குகின்றது என்பதனை இது விபரித்து வரலாற்று மரபின் தொடர்ச்சியினை இது வெளிப்படுத்துகின்றது.

எட்டாம் இயல் "வரலாற்றில் செல்வச் சந்நிதி தேர் - ஆய்வும் மதிப்பீடும்", ஒப்பியல் நோக்கில் இலங்கை - இந்தியத் தேர்களுடன் தேரமைப்பு, சிற்பத்திறன் என்பவற்றினை நுணுகி ஆராய்ந்து இதன் சிறப்பினை நிறுவுகின்றது.

ஒன்பதாம் இயல் என்று சொல்லத்தக்க சிறப்பியல்புகளுடன் 'நிறைவுரை' நூலின் இறுதிப் பகுதியாக விளங்குகின்றது.

இந்நூல் எழுதுவதற்கு ஆதாரமாக விளங்கிய நூல்கள் துணைநூல் விபரமாக தரப்பட்டுள்ளது. 'படங்கள்' என்ற பகுதியில் எரிந்து சாம்பராகிய தேர் ஒன்றின் பல பகுதிகளையும் வர்ண - நிழற் படங்களாக இறுதியில் தொகுத்திருப்பது கலையமைப்பின் சிறப்பினை உணர்ந்து கொள்ளப் பயன்படும் எனலாம்.

'தேர்க்கலை' வரலாற்றில் தனித்தேர் ஒன்று பற்றிய தமிழின் முதலாவது திறனாய்வு நூல் என்னும் சிறப்புடன் வெளிவரும் 'செல்வச்சந்திதி தேர்த்திறன்' என்ற இச்சிறுநூல் அரைகுறைப் பிரசவம் போன்று உங்கள் கரங்களில் தவழ்கின்றது. நிறை - குறைகளை உரிய வகையில் நடுநின்று விமர்சிக்க உங்கள் அனைவருக்கும் உரிமையுண்டு.

# 1.பொது அறிமுகம்

## செல்வச் சந்நிதி அமைவிடம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசத்தின் மேற்கெல்லையாகிய தொண்டைமானாறு என்னும் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற புராதன நகரத்தின் மத்தியில் செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இவ்வாலயம் யாழ்ப்பாணத்தின் வடகரையில் இந்து சமுத்திரமும் தொண்டமானாறும் சங்கமிக்கும் பிரதேசத்தில் அமையும் சிறப்புப் பெற்றதாகும். சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை என்னும் பெயர்களால் அழைக்கப்படும். இத்தகைய முருகன் இடஅமைவுச் சிறப்பால் 'ஆற்றங்கரையான்' என்று பக்தர்களால் போற்றப்படுகின்றான். ஆலயம் அமைந்துள்ள காணியின் தோம்புப் பெயர் 'முதிரை நின்ற செம்பாடு'[1] என்பதாகும்.

## செல்வச் சந்நிதி : பொருள் விளக்கம்.

சந்நிதி என்ற சொல்லுக்கு அண்மைநிலை, தெய்வம், குரு, பெரியோர் இவர்களின் திருமுன்பு, கோயில், கன்னிதானம் என்னும் பொருள்கள் உள்ளன. அருகு, அண்மை, திருமுன், மூலஸ்தானம், கோயில், ஆவேசிக்கை என்னும் பொருள்களும் அறிஞர்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இக் கோயிலின் பெயர் சிறப்புப் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி,

"தமிழ்ச் சைவமரபில் பெரும்பாலும் கோயில்களின் பெயர்கள் இடத்தின் பெயரையும் தல மூர்த்தியின் பெயரையும் கொண்டிருக்கும். ஆனால் இங்கோ செல்வச்சந்நிதி என்று மாத்திரமே பெரிதும் வழங்கப்படுகிறது. 'தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நிதி' என்னும் மரபு இல்லையென்றே கூற வேண்டும். அது போல 'சந்நிதி முருகன்" என்றும் விதந்தோதப் படுவதில்லை. 'சந்நிதியான்' என்றே குறிப்பிடப்படுவதுண்டு. 'ஆற்றங் கரையான்' எனும் மரபுண்டு என்பதை இங்கே குறிப்பிடல் வேண்டும். ஊர்ப் பெயரையும் உறையும் தெய்வத்தின் பெயரையும் குறிப்பிடாத அளவுக்கு முக்கியம் பெற்றுள்ள 'சந்நிதி' என்ற இப்பெயரின் கருத்தை அறிவது அவசியம். 'சந்நிதி' என்னும் சமஸ்கிருதச் சொல், சம் + நி + தி என நிற்பது. இதன் கருத்து.

(1) அண்மையில் இருப்பது, அண்மை நிலை.
(2) முன் நிற்றல்.

என்பனவாகும். காலக்கிரமத்தில் தெய்வம், குரு, பெரியோர் முன்னிற்பதை 'சந்நிதி' சந்நிதானம் என்பன குறித்தது. எனவே 'சந்நிதி' என்பது முருகன் முன்நிற்றலைக் குறிக்கின்றது.

> 'செல்வச் சந்நிதியில்' செல்வம் அடைமொழி முருகனையே செல்வமாக அவன் தருவனவற்றைச் செல்வமாகவும், அவனைச் செல்வத்தைப் பெறுவதற்கான வழியாகவும் கொள்ளும் அர்த்தங்களும் மனநிலைகளும் அதிலே தொனிக்கின்றது"[2]

என்று விளக்குகின்றமை ஏற்புடையதாகும்.

## தொண்டைமானாறு வரலாறு.

யாழ்ப்பாண வரலாற்றை விரிவாக ஆராய்ந்த முன்னோடி அறிஞராகிய முதலியார் செ.இராசநாயகம் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் நூலில்,

> "பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குலோத்துங்க சோழன் தன் தளகர்த்தனாகிய கருணாகரத் தொண்டைமானை ஒரு படையுடன் இலங்கைக்கு அனுப்பினான். கருணாகரன் இலங்கைக்குப் படையெடுத்து வந்த போது, யாழ்ப்பாணத்தில் கரணவாய், வெள்ளப் பரவை என்னுமிடங்களில் உப்பு அளவின்றி விளைந்து அழிந்து போவதைக் கண்டு அவ்வுப்பைச் சோழ தேசத்திற்கு அனுப்புவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்தான். அவன் இணுவிலிலே மனை கோலியிருந்து உப்பேற்றும் மரக்கலங்கள் காற்றின் உக்கிரத்தில் சிக்காது ஒதுங்கி

> நிற்கும் துறையாகத் தொண்டைமானா ற்றினையும் கட்டுவித்து இப்போது உரும்பிராய்க் குறிச்சியிலிருக்கும் கருணாகரப் பிள்ளையார் கோவிலையும் கட்டுவித்தான்"[3]

என்றும் திரு. குல.சபாநாதன்,

> "வடஇலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டைமானாறு என்னும் புராதன நகரம் உண்டு. கருணாகரத் தொண்டைமான் எனும் சிற்றரசனுடன் தொடர்பு பூண்ட நகரம் இப்பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. முதலாம் குலோத்துங்க சோழ மன்னன் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1070-1120) இவனுக்கு அமைச்சனும் படைத் தலைவனுமாக விளங்கியவன் பல்லவர் குலத்தோன்றலும், வண்டையர் கோனும் தொண்டைமானுமாகிய கருணாகரன் என்பவன் இவனுடைய முழுப்பெயர் பல்லவராகிய திருவரங்க கருணாகரத் தொண்டைமான் என்பது. இவன் புராதன இராணுவப் படையினையும் கப்பற் படையினையும் தொண்டைமானாறு துறையடுத்து நிறுவினான்."[4]

என்றும் தொண்டைமானாற்று வரலாற்றினைக் கூறிச் செல்கின்றனர்.

## ஆலய வரலாறு.

செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் தோற்றம் பற்றிய கருத்து முரண்பாடுகள் சில வரலாற்றாசிரியரிடையே உள்ளதை அவதானிக்கலாம். புராதன கோயில் கந்தபுராணக் கதையுடன் தொடர்புடைய ஒன்று என்றும் ஒல்லாந்தர் அதனை அழித்தனர் என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர். ஒல்லாந்தர்கள் இடித்த ஆலயங்களில் ஒன்றாக வரலாற்றில் விளங்குவதாக திரு. குல சபாநாதன், தொண்டைமானாறு வி.செல்லையா, தொண்டைமானாறு சி.ஆ. வேதநாயகம்பிள்ளை போன்றோர் கருதுகின்றனர். "ஈழத்திற் சைவக்கிராமிய வழிபாடு" பற்றி த. சண்முகசுந்தரம்,

> "செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். கதிர்காமம் உண்மையிலேயே காட்டில் உருவான பண்டைய முருகன் வழிபாட்டின் படிமுறை வளர்ச்சியே யெனலாம். வள்ளியைப் பற்றிச் செவி வழி வந்துள்ள கதிர்காமக் கதைகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. இன்றும் வள்ளி வழங்கியதான தேனும், தினைமாவும் முருகனுக்குக் கதிர்காமத்தில் சிறப்பாகப் படையல் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவ மாலைப்படி கருணாகரத் தொண்டைமானால் சோழப் பேரரசு காலத்திலே தொண்டைமானாறு அமைக்கப்பட்டது. தொடக்கத்தில் கப்பல் ஏறுவோர் இறங்குவோர்

> வணங்கிய முருகனின் சிறு கோயிலே காலகதியில் பெருங்கோயிலாக மாறியது எனக் கொள்ளலாம். கப்பற் பிரயாணம் அச்சம் நிறைந்ததான படியால் துறைமுகக் கடவுள் வழிபாடு நடைபெற்றது."[5]

என்று கருதுவதனை தகுந்த ஆதாரங்கள் கிடைக்கும் வரை நாமும் ஏற்றுக் கொள்வது பொருத்தமுடையதாகும்.

தற்போது மிகவும் சிறப்பாக கிரியைகள் நடைபெற்று வரும் ஆகமமுறை சாராத ஆலயமாக செல்வச்சந்நிதி விளங்குகின்றது. ஆகமம் சார் கிரியைகளும் தேவை, முக்கியத்துவம் கருதி பின்பற்றப்பட்டு வருகின்றமையை அவதானிக்கலாம். ஆடி அமாவாசை அற்றுப் போகும் பிரதமை தொடக்கம் ஆவணி பூரணை வரை 15 திருவிழாக்கள் நடைபெறும். 14 வது நாள் தேர்த்திருவிழா இலங்கை இந்துப் பெருவிழாவாக நடைபெறும்.

# அடிக்குறிப்புக்கள்.

1. அ.சண்முகதாஸ், ஆற்றங்கரையான், பக் :9

2. பேராசிரியர் கா. சிவத்தம்பி " தமிழ்ச் சைவப்பண்பாட்டிற் செல்வச்சந்நிதியின் முக்கியத்துவம்", வெள்ளோட்டம், 1984

3. அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், மேற்குறித்த நூல், பக்:4.

4. அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், மேற்குறித்த நூல், பக்:4.

5. அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், மேற்குறித்த நூல், பக்:4.

## உ.வரலாற்றுப்பின்னணி

ஒல்லாந்தர் காலத்தின் பின்னர் ஈழத்து இந்து ஆலயங்களில் மிகவும் " பக்தர் ஈர்ப்புக் கொண்டதாக" செல்வச்சந்நிதி விளங்குகின்றது. ஆகம முறைமை சாராத வழிபாட்டு நடைமுறைகளைத் தன்னகத்தே கொண்ட முருகன் சிற்சில அம்சங்களில் ஆகம முறைமை சார்ந்தும் பரிணமித்துள்ளமை தெளிவு. ஆகம முறைமையில் மிகவும் முக்கியத்துவம் பெறும் தேரோட்டம், செல்வச்சந்நிதியில் 1925ம் ஆண்டில் ஆரம்பமாகியது. இதற்கு ஆதாரமாகிய கட்டுத்தேரினை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஞானமூர்த்தி சண்முகம்பிள்ளை அமைத்துக் கொடுத்திருந்தார். தொடர்ந்து அதேயூரினைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் உருவாக்கி வழங்கிய தேர் தற்போது முருகன் வீதிவலம் வரப் பயன்படுகின்றது.

சித்திரப் பெருந்தேர் அமைக்கும் முயற்சி 1980 ம் ஆண்டு ஆவணி 15ல் யாழ் அரச அதிபர் திரு.யோகேந்திரா துரைசாமி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. ஆலய நிர்வாகத்தினர்களுக்கும் வெளியே உள்ள அபிமானிகளுக்கும் இடையிலானதோர் கருத்து முரண்பாடு இத்திருப்பணியை இடைநிறுத்தியது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உள்ளூர் சிற்பிகளைக் கொண்டு தேர் நிர்மாணிக்க வேண்டும் என்ற எண்ணம் தேர் நிர்மாணத்துடன் தொடர்புபட்ட நிர்வாகிகளுக்கு இருந்த போதிலும் அது செயலளவில் வெற்றி பெறவில்லை.

செல்வச் சந்நிதி முருகன் தேர் நிர்மாணத்தை மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த சரவணமுத்து ஜெயராசாவிடம் ஒப்படைக்க ஒருசாரார் விரும்ப, மறுசாரார் சின்னத்துரை நவரத்தினத்திடம் ஒப்படைக்க விரும்பியிருந்தனர். நிர்வாகம் இரண்டுபட்ட நிலையிலிருக்க ஆலய பக்தர் குழாமும் இரண்டு பட்டு நின்றது. படை நடாத்தும் தளபதிகளை ஒத்த நிலையில் நிர்வாகிகளும் ஸ்தபதிகளும் இரு வேறு அணிகளில் நின்று கருத்துக்களை அள்ளி வீசித் தத்தமது வாதத்தினை நிலை நிறுத்த முனைந்தனர். ஆயினும் குழப்பமே தொடர்ந்தது. யாழ்ப்பாணத்து ஸ்தபதிகளைத் தவிர்த்து இந்திய ஸ்தபதி ஒருவரிடம் இந் நிர்மாணத்தினை ஒப்படைப்பதென்று இறுதி முடிவு செய்யப்பட்டதன் மூலம் ஈரணி மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இப் பின்னணியில் தேர்த்திருப்பணிக்கென ஓர் சபை தோற்றம் பெறுகின்றது. இதற்கான ஆலோசனையை வழங்கியவர் பருத்தித்துறை உதவி அரச அதிபர் திரு.வை. வேலும்மயிலும் ஆகும். 'தொண்டமானாறு செல்வச் சந்நிதி தேர்த்திருப்பணிச் சபை' என்ற பெயரில் இவ்வமைப்பு உருவாகியது. ஆலய உரிமையாளர்கள் ஏழு பேருடன் ஊர்மக்கள் ஏழு பேரும் நிர்வாக சபையில் அங்கத்துவம் பெற்றனர். செல்வச் சந்நிதி முருகனையே மானசீகத் தலைவராகக் கொண்டு தேர்த்திருப்பணிசபை தோற்றுவிக்கப்பட்டது.

இச்சபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு:

செயலாளர் : து.துரைரத்தினம் J.P
இணைப்பொருளாளர்கள் : ஆ.சிவசண்முகம் ஐயர்,
: க.நவரத்தினராசா.

குழு உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| பொ. பாலேந்திர ஐயர் | சி.இ. சிறிதரன். |
| ஆ. அருணாசலம் | வ. சிவானந்த ஐயர் |
| சி. சற்குணவடிவேல் | வி. இராசேந்திர ஐயர் |
| கா. தேவராசா | செ. ஜெயவீரராசா |
| பொ. புவனேந்திரம் ஐயர் | த. பாலசுப்பிரமணிய ஐயர் |
| வி. தெய்வேந்திரம் ஐயர் | வ. அருந்தவராசா |
| இ. பிரேமரத்தினம் | சு. ஞானசேகரம். |

பொறியியலாளர் : க. சீனிவாசகம்
கணக்குப் பரிசோதகர் : தி. முருகதாசன்,
(கணக்காளர்.)

II

இலங்கை இந்துக்கலை வரலாற்றில் நயினாதீவு நாகபூஷணி தேரமைப்பிற்கு (1957) பின்னர் யாழ் இந்து சமூகமுமே எதிர்பார்த்தும் பங்கு கொண்டும் உருவாக்கிய தேர் நிர்மாணம் செல்வச் சந்நிதி முருகன் தேராகும். செல்வச் சந்நிதி தேர்த்திருப்பணிச் சபையினரின் முக்கிய நோக்கமாக அமைந்தது 'செல்வச் சந்நிதி முருகனுக்கு உருவாக்கப்படும் சித்திரப் பெருந்தேர் சிறப்பான பல அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்' என்பதாகும்.

இந் நோக்கத்திற்கமைய இலங்கையிலேயே மிகவும் பெரியளவினதாக பிரம்மாண்டமான பொருள் செலவில் - சுமார் 25 இலட்சம் ரூபா பணப் பெறுமதியில் - உருவாகிய இத்தேர் அது காலவரையிலான மிகப் பெருந்தேர்த் திருப்பணியாகும்.

தேர்த் திருப்பணிச்சபை செயற்படத் தொடங்கியதும் பிரதமஸ்தபதியாக யாரை வரவழைப்பது என்ற பிரச்சினை முதலில் எழுகின்றது. சபையினர் இதற்கான ஆலோசனையை இலங்கையின் புகழ்பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தான ஆதீனகர்த்தர், மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களை நாடினர். மாவை முருகன் சிற்பத்தேரினை 1782ம் ஆண்டில் நிர்மாணித்த மாலைகண்டான் வீரபத்திர ஸ்தபதியின் சிறப்பும் பாரம்பரியமும் ஆதீன கர்த்தர் அவர்களைப் பெரிதும் ஆட் கொண்டிருந்தன.

அதே பாரம்பரியத்தில் உதித்த சோம. லெட்சுமண ஸ்தபதி 1974-1980 ம் ஆண்டு வரையில் அனலைதீவு ஐயப்பனுக்கு தேர் நிர்மாணித்திருந்தார். அதுவும் அதி சிறப்புத் திறன் கொண்டதாகும். மாவையில் மஞ்சம் ஒன்றும் கன்னாதிட்டிப் பத்திரகாளிக்கு சிற்பத்தேர் ஒன்றும் திருப்பணி தொடங்கி ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்று வந்தன. இந்நிலையில் ஆதீன கர்த்தரவர்களின் உள்மனம் சிற்ப இலக்கணத்திறன் நிறைந்த லெட்சுமண ஸ்தபதியை தேர்வு செய்ய சபையினரால் ஏகமனதாக சந்நிதி தேர் ஸ்தபதியாக லெட்சுமணன் பொறுப்பேற்ற நிகழ்வு இடம் பெறுகின்றது.

நயினாதீவு போன்று யாழ் அரச அதிபர், உதவி அரச அதிபர்கள் போன்ற அரச உயர்மட்ட அதிகாரிகளும் அறிஞர்களும் ஆர்வத்துடன் வெவ்வேறு வழிகளிலும் பங்கு பற்றிய பெரும் நிர்மாணம் என்பதும் சிறப்பம்சமாகும். இந் நிர்மாண காலம் 1981-1984 ஆகும். வெள்ளோட்டம் கண்டநாள் 06.09.1984.

# 3.தேர்க்கலை.

யாழ்ப்பாணத்தில் மிகவும் பெரிய நிர்மாணமாகிய சந்நிதித்தேர் 44':10" உயரமுடையதாகும். நாகர முகோத்தர மரபின் விரிவிலமையும் இது 28 உபகோணங்களை திருப்ப அல்லது மடக்கைகளால் தோற்றுவிப்பதும் குறிப்பிடத்தக்கது. பார்விதானத்தி லிருந்து சிம்மாசனம் வரை ஏழு தளங்களுடன் 27 அடுக்குகளும் உடையதாகும். இவை பின்வருமாறு அமைகின்றன: [1]

1. பார்விதானம்
2. குமுத அடுக்கு
3. பத்ம அடுக்கு
4. கஜபந்தி
5. மகர அடுக்கு
6. பத்ம அடுக்கு கண்டம்.
7. சித்தூர் மட்டம்
8. வேதியல் அடுக்கு.
9. கபோதக அடுக்கு
10. புதவடை அடுக்கு.
11. விருத்த குமுதம் அடுக்கு.
12. ஜெகதி அடுக்கு.
13. படலை அடுக்கு.
14. ரிஷிபகண்ட வர்க்கம்.
15. மகர அடுக்கு.
16. குமுத அடுக்கு.
17. கண்ட அடுக்கு.
18. வேதியல் அடுக்கு.
19. கபோதக அடுக்கு.
20. புதவடை அடுக்கு.
21. ஜெகதி அடுக்கு.
22. கண்ட அடுக்கு.
23. வேதியல் அடுக்கு
24. கபோதக அடுக்கு.
25. புதவடை அடுக்கு.
26. ஜெகதிகண்ட அடுக்கு.
27. வேதியல் கபோதகம் அடுக்கு.

இவற்றில் 26, 27வது அடுக்குகள் இரண்டும் இவ்விரண்டு அடுக்குகளினதும் சேர்க்கை அடுக்குகளாகவே அமைகின்றன. அவற்றினைப் பிரித்து நோக்குவதாயின் எண்ணிக்கை 29 ஆக அதிகரிக்கும். ஆயின் அவை 27 என்பதே மரபு.

இத்தேரின் பார்விதானத்தில் ஏழு பார்களும் ஆறு விலகு பார்களும் வலமும் இடமும் பூதப்பார்களும் அமைகின்றன. ஆறு சில்லுகளுடைய இதன் மூன்று அச்சுக்களும் இரும்புச் சட்ட வளையல்களால் ஏனைய தேர்ச்சில்லுகள் போன்று பாதுகாக்கப்படும் அதே சமயம் அவற்றின் விளிம்பாகிய 'கனம்' இரும்பு வளையத்தினால் மூடப்பெற்றமை மரபு மீறுகையாகவே தெரிகிறது. அதற்கேற்ப தேரினைத் திசை திருப்பும் சறுக்குக்கட்டை அல்லது மிண்டியும் இரும்பினால் உருவாக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அச்சுகள் மூன்றும் இரும்பினால் உருவானவை என்பது சொல்லாமலே விளங்கும். நட்டுக் கண் வரிசையிலிருந்து சிம்மாசனம் வரையில் ஆறு சிற்ப வரிசைகள் அனலை தீவினைப் போன்ற அமைப்பிலிடம் பெறுகின்றன. உபபீடத்தில் அமையும் குச்ச விக்கிரகங்கள் இதே வகையில் மாவிட்டபுரத்தின் (1954) பின்னர் ஏற்பட்ட கலைவளர்ச்சியைப் பிரதிபலிப்பதாகின்றது. அதே வேளையில் தேரின் அமைப்பு முறைக்கேற்ப எண்ணிக்கை 8-12 ஆவதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றில் பத்மாசுரமர்த்தனி, வீரபத்திரர், நாரதர், தும்புருவர், குறவன், குறத்தி, மூன்று வீணை மீட்டும் பெண்கள், மூன்று கறுப்பர்கள் என பன்னிரண்டு அமைகின்றன.

நான்கு தளங்களுடைய இவ்விமானம் எண்கோண மரபில் நராசனத்திலிருந்து தேர்அமைப்புக் கோணத்திற்கேற்ப அமைகிறது. மிகவும் பாரிய தோற்றமுடைய இது பூர்த்தியாகாத நிலையிலேயே வெள்ளோட்டம் நடைபெற்றதென்பது கவனத்திற்குரியது.

ஸ்தபதி. சோம. இலட்சுமணனின் குறிப்பிலிருந்து 36 கந்தவர்வன்களும் 48பூதங்களும் 16 நேர்விக்கிரகங்களும் இடம்பெறவிருந்ததாக அறியமுடிகிறது. இது ஓர் புதுமை மிக்கதும் தேரின் பிரமாண்டத் தோற்றத்தினை சிறப்பச் செழுமையுடையதாக்கும் அம்சமுமாகும். அதே வேளையில் மஞ்சவனப்பதி (1939), அனலைதீவு (1980) ஆகிய இடங்களில் சிற்றளவில் ஏற்கனவே கையாளப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தேரின் மற்றுமோர் முக்கிய சிறப்பம்சம் இதன் சாரத்திய நிலையிலமையும் இரு பெரிய முகப்புக் குதிரைகளும், பிரம்மாவும் ஆகும். இவை தேர்க்கலை வரலாற்றில் தனியிடம் பெறுபவை.

குதிரைகளின் இயற்கைத் தன்மை அல்லது இயற்பண்பு நிறைந்த உயிர்த்துடிப்பும் பாயும் வேகமும் தனித்துவம் நிரம்பியதாக அமையும். அதே வேளையில் நீர்வேலி அரசகேசரிபிள்ளையார் (1967) மரபின் விரிவும் சிறப்பும் என்று கூறத்தக்க வகையில் யாழ்ப்பாணத்தில் மிகவும் உயரிய வேறிடங்களிற் காணமுடியாத கலைப்படைப்புகளாகின்றமை குறிப்பிடத்தக்கது. சாரதியாகிய பிரம்மா நான்முகங்களுடன் நாற்கரங்கள் என்ற நிலையிலிருந்து எண்கரங்களாவதும் மிகவும் பெரிய உருவிலமைவதும் சிறப்பம்சமாகும். பொதுவாக இத்தேரின் சிறப்பினை மேலுயர்த்தும் தனிச்சிறப்பு இச் சாரத்திய அம்சத்திற்குரியது. விமானத்திலும் தளத்திலும் இடம்பெறும் 10008 மணிகளும் தளத்திலமையும் 500 பித்தளை குமிழ்களும் அழகியல் நிலையில் கவர்ச்சியுடையதாகும். அதே வேளையில் தேரோட்ட வேளையில் அதன் இயங்கும் இயல்பு 'மறைஞான' அல்லது 'அநுபூதி' நிலையிற் சிக்கிய பக்தர்களின் ஈர்ப்பினை அதிகளவிற் பெறுவதுமாகும்.

அனலைதீவு தேர் நிர்மாணத்திற் பங்கு கொண்ட தமிழகக் கலைஞர்களுடன் மேலும் பலர் இந் நிர்மாணத்திற் கலந்து கொண்டமை அவதானித்தற்குரியதாகும்.

அனலைதீவு நிர்மாண ஆரம்ப காலத்தில் இருந்த அரசுக் கட்டுப்பாடுகள் எதுவும் இக்கால கட்டத்தில் இடம் பெறாவிடினும் 'நெருக்கடி நிலைமைகள்' சில அமைவது இந் நிர்மாணத்தின் போது பல தாக்கங்களை ஏற்படுத்தியது. அதே வேளையில் இங்கே முக்கிய போக்குகள் சிலவற்றை தேர் அமைப்பு அல்லது அமைவு நிலையிலே கண்டுகொள்ள முடிகிறது. தேர் வடிவமைப்பில் அனலைதீவில் அறிமுகமாகிய முக்கிய போக்கும் நயினாதீவிலிருந்து பொன்னாலை வரையிலும் அனலைதீவு வரையில்ும் வளர்ந்து வந்த இரு முக்கிய சிற்பக்கலைப் போக்குகளும் சங்கமிக்கும் கலாசங்கமும் இத்தேரினை தேர்க்கலை வரலாற்றிலே யாழ்ப்பாணத்தில் முதன்மை பெறச் செய்யும் இயல்புடையதாகும். அத்துடன் மணிமண்டபமும், மேல் விமானமும் யாழ்பாணியில் அமைவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துத் தேர்களில் மிகவும் பெரியதாகவும் 'தேர்க்கலைக் களஞ்சியம்' என்று போற்றப்படும் மஞ்சவனப்பதி (1939) நயினாதீவு (1957) ஆகிய வரிசையில் இடம்பெறும் சிறப்புடையதாகவும் அமைந்த சந்நிதி முருகன் தேர் நிர்மாணித்த சோம. இலட்சுமண ஸ்தபதி,

> "இப் பணியைப் பூர்த்தி செய்து
> உங்களிடம் தந்துள்ளோம். எல்லாம்
> வல்ல செல்வச்சந்நிதி முருகன் பல

நூற்றாண்டுகள் இத்தேரில் பவனி வர
இக்கலைக் களஞ்சியத்தை நன்கு
பராமரிக்க வேண்டிய பொறுப்பை
உங்களிடம் விட்டு தற்காலிகமாக
உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்",[2]

என்று யாழ்ப்பாண இந்து சமூகத்திடம் ஒப்படைத்து சென்ற இருவருடமாவதற்குள் - சரியாக ஒருவருடமும் ஆறு மாதமும் - இத்தேர் எரியூட்டப் பெற்றமை ஏற்கனவே வகுக்கப் பெற்ற 'பொது நியதி' யின் அடிப்படையில் நடைபெற்ற தொன்றேயாகும்.

## அடிக்குறிப்புக்கள்.

1. சோம. லெட்சுமணன், வெள்ளோட்டம் ,1984. பக்: குறிப்பிடப்படவில்லை.

2. சோம. லெட்சுமணன், மேற்குறித்த கட்டுரையில் பக்: குறிப்பிடப்படவில்லை.

# 4. தேர்ச்சிற்பம்

யாழ்ப்பாணத்து தேர்ச்சிற்பக் கலை வரலாற்றில் ஓருயரிய வளர்ச்சி நிலையைப் பிரதிபலிக்கும் சிற்பங்கள் பல, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் தேரிற் காணப்படுகின்றன. இவை நயினாதீவு (1957), பொன்னாலை (1983) என்னும் தலைசிறந்த சிற்பங்களின் வரிசையில் இடம் பெறும் சிறப்புடையன. 'தலைசிறந்த சிற்பங்கள்' என்னும் வகையில் இங்கே இடம் பெறும் ஆலய பௌராணிக வரலாற்றியல் சிற்பங்கள் சிற்பக்கலையின் புதிய பரிணாமம்' என்று போற்றக்கூடிய சிறப்பினைப் பிரதிபலிப்பனவாகும். இவ்வகையில் இவை, நயினாதீவின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் என்று குறிப்பிடலாம்.

இச்சிற்பங்களை உருவாக்கியவர், 'கலைஞர்' என்றே பெயரேதுமின்றி அழைக்கக்கூடிய தனித்துவம் மிக்க 'கலைஞர் ஏகாம்பரம்' என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏனைய சிற்பங்களும் பொதுவாக உயரிய வளர்ச்சியைப் பிரதிபலிப்பனவே என்பதில் ஐயமேதுமில்லை. அவை அனலைதீவுடன் (1980) ஒப்பிடக் கூடிய சிறப்புடையன.

முற்குறித்த வரிசையில் இடம் பெறுவனவும் புதிய சிற்ப பரிணாம நிலைகளைப் பிரதிபலிப்பனவும் 'தலை சிறந்த சிற்பங்களே' என்பது எமது கவனத்தில் இடம் பெறவேண்டியதாகும். ஏனைய சிற்பங்களிற் பெரும்பாலானவற்றை உருவாக்கியவர் ஏகாம்பரத்தின் இளைய சகோதரரும் நயினாதீவில் (1957) அறிமுகமாகியவருமான ச.தியாகராஜனே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முருகன்-கதிர்காமர் உரையாடல் என்னும் சிற்பம், இங்கே காணப்படும் தலைசிறந்த சிற்பங்களில் ஒன்றாகவும் அதே வேளையில் யாழ்ப்பாண இந்து பௌராணிக மரபில் பல்வேறு வகையிலும் முக்கியத்துவம் பெறுவதாகவும் அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சிற்பத்தில், ஆலயத்தின் முன்றலில் அமைந்துள்ள இரு திண்ணைகளிலே வலதுபுறம் முருகனும் இடது புறம் கதிர்காமரும் எதிரெதிர் அமர்ந்து உரையாடும் தோற்றம் தெரிகின்றது. இவ்வடிவம் முருகனின் குருவடிவம் என்றே போற்றும் சிறப்புடையதாகும்.

செல்வச்சந்நிதி ஆலயம் நடுவிலும் பரிவார விநாயகர் ஆலயம் வலது புறமும் இச்சிற்பத்தின் பின்னணியில் இடம் பெறுகின்றன. ஆலய முன் - இடது பக்கமாகப் பெரிய மரமொன்று வளர்ந்துள்ளது. வலது திண்ணையில் முருகன் சிறுவயதுத் தோற்ற முடையவனாக, வலது காலினை முன்னாக கீழே தொங்க நீட்டியும் இடது காலினை வலப்புறம் மடித்து வலது முழந்தாளின் மேற்தொடையில் வைத்தும் வீராசன நிலையில் இருக்கிறான். அவனது இடது கரம் முன்னோக்கி நீண்டு தக்ஷணாமூர்த்தியின் சின்முத்திரை போன்று உபதேசிக்கும் நிலையிலே அமைகிறது. வேல் அவனது வலது மார்பிலே சாய்ந்து அணைந்த நிலையிலுள்ளது. யோக தத்துவ விளக்கம் கூட இச்சிற்பத்தில் வெளிப்படும் தன்மை அவதானித்தற்குரியது.

கதிர்காமர் இரு கால்களையும் சப்பணம் கொட்டிய நிலையில் அமர்ந்து, கரங்களை ஒன்றின் மீது ஒன்றாக மாற்றிக் கட்டிய நிலையில் தலையை சற்று கீழே சரித்து உபதேசிக்கும் முருகனின் கரத்தை கூர்ந்து நோக்கியவாறு காணப்படுகிறார். குருவின் உபதேசத்தை ஆவலுடன் கேட்கும் 'சிஷ்யபாவம்' அவரில் தெரிகின்றது. இந்து மரபின் குரு-சீட முறையையும் குருவின் மேன்மையையும் குறிப்பதாகும். கதிர்காமர் எவ்வளவு தான் வயதில் முதிர்ந்தவராக இருந்த போதிலும் முருகச் சிறுவனை அன்புடன் ஆதரித்து அமுது படைத்து வளர்க்கும் தாய் போலவே செயற்படினும் அவனையோர் சிறுவனாகவே எண்ணியதில்லை. தன்னை இயக்கும் பரம் பொருள் என்றே எண்ணி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளையில், முருகனும் கதிர்காமரை தாயாக, தந்தையாக, பக்தனாக மட்டுமல்லாது சீடனாகவும் கொண்டிருந்தமை தெளிவாகின்றது. இறைவன் என்றுமே இளைஞன்தான்; பக்தன் எவ்வளவு வயது முதிர்ந்த போதிலும் அறிவு நிலையில் சிறியவன்தான். சிவனுடைய தக்ஷணாமூர்த்த வடிவுடன் ஒப்பு நோக்கும் வகையில் சந்நிதி முருகனின் இந்த உபதேசக் கோலத்தின் சிறப்பு அமைகின்றது.

தக்ஷணா மூர்த்தம் யோக தக்ஷணாமூர்த்தி, ஞான தக்ஷணாமூர்த்தி, வியாக்கியான தக்ஷணாமூர்த்தி, வீணாதர தக்ஷணாமூர்த்தி என நான்கு வடிவங்களாக இருந்த போதிலும் சிறப்பிடம் பெறுவன ஞான, வியாக்கியான மூர்த்திகளே எனலாம். அதிலும் சிறப்பாக வியாக்கியான தக்ஷணாமூர்த்தமே இறைவனின் குரு வடிவமாக விளங்குவதாகும். இவரின் பாதத்தின் கீழ் உபதேசம் பெறும் சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்னும் நால்வரும் அமர்ந்திருப்பர்.

இறைவனின் இவ்வியாக்கியான தக்ஷிணாமூர்த்தம் போலவே இந்தச் செல்வச் சந்நிதி முருகனின் வியாக்கியான வடிவமும் வீராசன நிலையிலே அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். இது தந்தையாகிய இறைவனின் வடிவைக் காட்டிலும் இருவகைகளில் சிறப்பம்சமுடைய வேறுபாடுகளுடையதாகும்.

முதலாவதாக முதல் வடிவில் குருவின் பாதத்தின் கீழ் இரு மருங்கிலும் சீடர்கள் காணப்பட, இரண்டாவது வடிவிலே, குருவும் சீடனும் சுமாராக ஒரே உயரமுள்ள இரு திண்ணைகளில் காட்சி தருகின்றனர். இரண்டாவதாக, முதல் வடிவில் சிவன் ஆயுதம் எதுவும் இல்லாதிருக்க, இரண்டாவது வடிவில் முருகன் வேலினைத் தன் வலது மார்பிலே சாய்த்து வைத்திருக்கிறான்.

இவை மட்டுமல்லாது சிவனிடம் உபதேசம் பெற்ற முனிவர்கள் சிவபக்தர்களே தவிர, கைலாசத்திலோ அல்லது வேறேதும் ஆலயத்திலோ அவனைப் பூசித்தோ வழிபட்டோ இருப்பவர்களல்லர். ஆயின் இரண்டாவது வடிவில், உபதேசம் பெறும் கதிர்காமர், சந்நிதி வேலவனைத் தினமும் வழிபட்டும் ஆதரித்தும் வருபவர். ஒரே ஆலயத்திலேயே அவர் தன்னை முருகனிடம் அர்ப்பணித்தவர். முதல் வடிவில் சீடர்களாகிய முனிவர்கள் தமது சுயநலனையே ஓரளவு கருத்திற் கொண்டு முத்தியை இலக்கு வைத்து உபதேசம் பெறுமளவிற்கு பக்குவ நிலையேதும் பெறாதவர்கள்.

அவ்வாறு தேடிச் சென்று தமக்கு விளங்காத பகுதிகளைக் கூறி உபதேசம் செய்யும்படி வேண்டியவர்கள். ஆனால் பின்னவரோ அத்தகைய ஞான விளக்கங்களைக் கோரியவரோ அல்லது தனது சுயமுன்னேற்றத்தைக் கருதி முருகனை வேண்டியவரோ அல்லர். முருகன் தான் விரும்பிய நேரத்திலே தோன்றி உரையாடும் பேறு பெற்றவர்.

ஆகவே அவர் வெறுமனே சீடருமல்ல. முருகனை சைவசித்தாந்தம் கூறும் வழிபடு நிலைகள் நான்கையுமே, அப்படியொன்று இருப்பதாகத் தெரிந்து கொள்ளாது, ஆனால் அதே முறையின் அடிநிலை அன்பு முறையை அனுசரித்து அருள் பெற்றவர். முருகனுக்கு நண்பனாக, அடிமையாக, தந்தையாக அமைவதுடன் மாத்திரமல்லாது முருகனையே குருவாகவும் கொண்டவர். அதுமட்டுமல்லாது முருகனுக்குத் தாயாகவும் பூசகராகவும் இருந்து அமுது பரிமாறி அவன் திருவமுது செய்வதைக் கண்டு ஆனந்தித்தும் அவனேதான் விரும்பும் உணவை வாயாலே கேட்குமளவிற்கு சிறப்பிடம் பெற்றுயர்ந்தவர். இவ்வவகையில் அவர் முன்னைய வடிவ முனிவர்களைவிட இறை முருகனுடன் நெருங்கிய உறவினையும் தொடர்பினையும் கொண்டவராகவே காணப்படுகின்றார்.

தட்சணாமூர்த்தம், உபதேசிக்கும் இடம் ஓர் ஆலயத்தை மையமாகக் கொண்டதல்ல. கைலாய மலையிலே கல்லால விருட்ச நிழலிலேயே இவ்வுபதேசம் நிகழ்வது. ஆனால் இங்கே, கதிர்காமர் பூசித்த, அவரே பூசிக்க வேண்டும் என்ற முருகனே விரும்பிக் கேட்ட காரணத்தால் மறுமலர்ச்சி பெற்ற சந்நிதி ஆலய முன்றலே உபதேச இடமாகின்றது. அத்துடன்

வீரவாகுதேவர் முருகனை வழிபட்டதும் ஐராவசு தவம் செய்து முத்தி அடைந்ததுமான ஐதிகமுடையதும் முருகனே கதிர்காமத்தில் கதிர்காமரிடம் கொடுத்த வேலினைப் பிரதிஷ்டை செய்ததுமான ஆலயம் என்பதுடன் மாத்திரமல்லாது, பூசைமுறையேதும் தெரியாது என்று கூறியவுடன் அம்முறையேதும் இன்றி பூசை நடைபெறும் கதிர்காமத்திற்கு இமைப் பொழுதில் அழைத்துச் சென்று காண்பித்துக் கைவேலினையும் கொடுத்து அதனையே மூலமாகக் கொண்டு மீளமைப்புப் பெற்ற ஆலயத்திலேயே பக்தமணி கதிர்காமர் இத்தகைய உரையாடலை முருகனுடன் நடாத்தியும் அவனிடம் உபதேசம் பெற்றும் வந்தமையும் அவ்வாலய முன்றலிலேயே இது நடைபெற்றமையும் சிறப்புடைய தேயாகும். இச்சிற்பம் கூறும் சந்நிதி வேலவனின் உபதேச உரையாடல் வடிவினை நாம், 'சந்நிதி முருக தட்சணாமூர்த்தம்' என்று போற்றுவது சாலவும் பொருத்தமானதேயாகும்.

வெறுமனே ஐதிகமாகவிருந்த வரலாற்றினை சிற்பக்கலையூடாக விக்கிரகமாகக் கண்முன்னே வடிவமாக்கி மூர்த்தி பேதமாகவே கொள்ளவைத்த சிற்பக் கலைஞன் உண்மையிலேயே போற்றுதற்குரிய 'கலைஞன்' தான். இச்சிற்பம் யாழ்ப்பாணத்துத் தேர்ச் சிற்பங்களில் சிறப்பிடம் பெறுபவற்றில் ஒன்று என்பதில் ஐயமேதுமில்லை. இதிலிடம்பெறும் இரு திண்ணைகள் ஆலயத்தில் இன்றுமுள்ளமை கவனத்திற்குரியதாகும். "கோயிலின் நந்திக்குப் பின்னால் உள்ள திண்ணைகள் இரண்டும் முருகனுடன் கதிர்காமரும் அமர்ந்து கதைத்த திண்ணைகளாகக் கருதப்படுகின்றன".[1]

ஆலய பௌராணிக வரலாற்றியல் சிற்பங்கள் போலவே ஆலய, பரிவார மூர்த்திகளின் தோற்ற சிற்பங்களும் குறிப்பிடத்தகுந்த வனப்பும் சிற்பநுட்பமும் மிக்கவை. மூலஸ்தானத் தோற்றம், வைரவராலயம், பூவரசுமரமும் நாகதம்பிரான் ஆலயமும் என்பன இத்தகைய சிற்பங்களாகும். இங்கு இடம் பெறும் சிறந்த சிற்பங்களில் பிரணவத்தினுள் சிவன் பார்வதி விநாயகர் முருகன், நர்த்தனவிநாயகர், கீதோபதேசம் போன்ற சிலவற்றை பெயர் சுட்டியுரைக்க முடியும்.

கீதோபதேசம் பல்வேறு வகையிலும் தனிச் சிறப்புடைய தொன்றாகும். சிற்பத்தில் இடம் வலமாக முன் பின்னாகவுள்ள நான்கு சக்கர ரதத்தில் நடுப்பீடத்திலே சோர்வுறும் அருச்சுனன் முழந்தாளில் மண்டியிட்ட நிலையில் இரு கரங்களையும் கூப்பியிருக்க, சாரதியாக முன்பீடத்தில் அமர்ந்திருக்கும் கண்ணன் தனது இடது கரத்தில் குதிரையின் சேணக்கயிற்றைப் பிடித்தவாறு முன் நேர் பார்வையாகத் தெரியும் உடலமைப்புடன் தலையை முன்-வலமாகச் சரித்து அருச்சுனனை நோக்கி அமர்ந்திருக்கிறான். இடது காலை குதிரை முதுகில் ஊன்றியும் வலது காலை இடமாக மடித்து இடது முழந்தாளின் மேல் வைத்தும் வீராசன நிலையில் இருக்கும் அவன் குருவடிவ தோற்றத்துடன் காணப்படுகின்றான். அவனுடைய வலது கரம் அருச்சுனனை நோக்கி உயர்ந்து உபதேசிக்கும் நிலையிலுள்ளது. இரதத்தின் பின்னே அருச்சுனனின் ஏனைய சகோதரர்களாகிய வீமன், தருமராஜன், நகுலன், சகாதேவன் என்போர் வலமிருந்து இடமாக கூப்பிய கரங்களுடன் உபதேசத்தை செவிமடுக்கின்றனர். இவர்களில் தருமராஜன் மன்னனுக்குரிய ஆடையாபரணங்களுடன் அமைய, இவனுடைய தலையிலே கிரீடம் காணப்படவில்லை, சடையே தெரிகின்றது. தருமராஜன் போன்றே ஏனையவர்களும்

அமைவது குறிப்பிடத்தக்கதாகும். அருச்சுனனும் கண்ணனும் சிறிய உருவுடனும் ஏனையோர் பெரிய உருவுடனும் சிற்ப நுட்ப முறையில் அமைவது சிறப்புமிக்கது.

இரதத்தின் சில்லுகள் குடத்துடன் கூடிய ஆரக்காற் சில்லுகளாகவே அமைகின்றன. அவற்றைத் 'திறந்து' காட்டிய புடைப்பு நுட்பம் சிறப்புடையது. இரதத்தின் நடுப்பகுதியால் பின்னணி முழுவதும் தெரியக்கூடிய வகையில், தேர்ப்பீடத்திலமர்ந்த அருச்சுனனும், சாரதிப்பீடத்தில் அமர்ந்த கண்ணனும் முழுவுருவங்களாக பின்னணியிற் புடைப்பு முறையிற் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேரின் துலாவின் முன் நுகத்திற் குதிரை பூட்டப்பட்டுள்ளது. குதிரை, கண்ணனின் மார்பு மட்டம் வரை உயரமுடையதாகும். இக் குதிரையின் எடுப்பு மிக்க நிமிர்ந்த தோற்றம் சிறப்புடையது. கலைவனப்பு மிக்க இச்சிற்பம் புடைப்பு நுட்பத்திலும் நுண்ணுளிச் சிறப்பு மிக்கதென்பதில் ஐயமில்லை.

நயினாதீவின் (1957) தலைசிறந்த சிற்ப வரிசையில் இதனை மதிப்பிடுதல் சாலவும் பொருத்தமுடையதே எனலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஆற்றங்கரையான். பக்: 45.

## 5.தேரோவியம்

தேரோவியக் கலையில் ஓர் திருப்பு முனையாக அமைவது செல்வச்சந்நிதி முருகன் தேர் ஆகும். யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்லாது இலங்கையிலேயே மிகவும் பெரிய தேராக்கயால் அலங்கார ஓவியங்களை அதிகளவிற் கொண்டமைதலும் ஓவிய வடிவங்களைப் பெரியளவிற் கொண்டமைதலும் இயல்பானதே. இவ்வோவியங்களை வடிவமைத்த ஓவியக்கலைஞர் மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த வ.வேலாயுதம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு முன்னர் பல தேரோவியங்களை வடிவமைத்த போதிலும் இவரது திறமையை அதிகளவில் பிரதிபலிப்பது சந்நிதி ஓவியம் ஆகும்.

இங்கே காணப்படும் ஓவிய வடிவங்களாக பறவை வடிவாகிய சோடி அன்னம், விலங்கு வடிவாகிய சிங்கத்திலிருந்து பெறப்பட்ட வியஞ்சக கீர்த்தி முகம் என்பன அமைகின்றன. மயில்தோகை செடி, கொடியுருவங்கள் என்பனவும் இங்கே பெருமளவில் அமைகின்றன. சிற்ப மேற்பரப்பு ஓவியமாகிய யாளி, தொங்குதாமரை என்பனவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

தேரின் எட்டு வாசல்களிலும் இரண்டாவது பவளக்கால் வரிசையின் வெளியே அமையும் விதானச் சுற்றுதளத்திலுள்ள சோடி அன்னப்பறவை வடிவம் குறிப்பிடத்தக்க சிறப்பு உடையது.

ஒன்றை ஒன்று நோக்கிய நிலையில் மேற்பகுதி விதான மையத்தையும் கீழ்ப்பகுதி வெளியே வாசலை நோக்கியும் அமைய கீழே நின்று பார்ப்பவர்க்கு உடற்பகுதியே முதலிற் தெரியும்.

இவ்வன்ன பறவைகளை மிகவும் பெரிய வடிவில் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இரண்டு அன்னங்களும் நீரில் நீந்துவது போன்ற பாவனையில் அமைகின்றன. முன்னங்கால்கள் முழுமையாகத் தெரியாவிட்டாலும் கூட உடலின் முன் கீழ்ப்பாகத்திலே அதன் விரல்கள் சிறிதளவாகத் தெரிவது அவற்றின் நிலையை தெளிவுபடுத்துவதாகும்.

அன்னப்பறவைகளின் உடலமைப்பானது கழுத்தினை உடலுடன் சேர்த்துப் பின்புறமாக நீட்டியபடி முன்னோக்கி நீண்டு உடலின் முன்மட்டத்திலே கொண்டு அமைவதும் அதன் வாலில் மூன்று பெரிய இறகுகளில் ஒன்று மேலுயர்ந்து பின் வளைந்தும் மூன்றாவது ஓரளவு மேலுயர்ந்து பின்னாக விரிந்தும் இருக்க வாலின் சிறுகீழிறகு உடலின் அசைவினை மிகுதிப்படுத்தும் வகையில் தலை, கழுத்திலிருந்து பெரும் புறவமைப்பினை வளர்தெடுப்பதும் போற்றத்தகுந்ததாகும். இவ்வன்னச் சோடிகள் யாவும் இரு தூண்களிற்கும் இடையில் மேலுயர்ந்த தளத்தில் அமைவதாகும்.

அத்தளப் பின்னணி மண்ணிறமாக அமைய மஞ்சள், வெண்மஞ்சள், கருமஞ்சள், வெண்ணிறமாகிய உடலமைப்புடைய அன்னங்கள் தாமரைக்குளத்தில் நீந்தி விளையாடும் தோற்றத்தைக் கீழிருந்து நோக்குவோருக்கு அமைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பவளத்தூண்களின் மேற்பகுதியிலமைந்ததும் விமானத்தைத் தாங்கும் அதன் பிரதம மூலைகளில் இரு கோணங்களையும் இணைத்து நிற்பதுமாகிய பெரிய உத்தரத்தின் கீழ்ப்பரப்பு, மயிற்தோகையின் அலங்காரம் பெற்றிருப்பது யாழ்ப்பாணத் தேரோவிய மரபில் புதுமையானதும் தனிச்சிறப்பு மிக்கதுமானதோர் அம்சமே எனலாம். இத்தோகை வடிவமைந்த தளப்பரப்பும் ஏறக்குறைய மயிலின் தோகை போன்றதேயாகும். வெளிப்பகுதி அகன்றும் உட்பகுதி ஒடுங்கியுமுள்ள இத்தளம் ஐங்கோண வடிவுடையது. அகன்ற வெளிப்பகுதி இரு கோணமும் ஏனைய ஊர், இடம், வலம் என்பன தனித்தனி ஒவ்வோர் கோணமுமாக அமைய பார்ப்பவர் கண்களுக்கு மயிலே விமானத்தைத் தாங்கி நிற்பதாகத் தோன்றும்.

## 6.கலைஞர்கள்.

செல்வச் சந்நிதியில் சித்திரப் பெருந்தேர் வடிவமைத்த கலைஞர்கள் பற்றிய சுருங்கிய அறிமுகமாக இப்பகுதி அமைகிறது. பிரமஸ்தபதி பற்றியும் சிற்பி ச. ஏகாம்பரம் பற்றியும் சிறப்புக் கருதி அவ்வவ் இடங்களில் எடுத்து காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாயினும் இவர்களும் இவ்வியலின் சிறப்பு நோக்கிற்கு ஏற்ப அறிமுகம் பெறுகின்றனர்.

### மாலைகண்டான் சோம. லெட்சுமண ஸ்தபதி.

இத்தேரை வடிவமைத்த பிரதம ஸ்தபதி இந்தியத் தமிழகத்திலுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மாலைகண்டான் என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட சோம. லெட்சுமண ஸ்தபதியாகும். இவர் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் ஆஸ்தான ஸ்தபதியாகப் பணியாற்றிய வீரபத்திர ஆச்சாரியாரின் வாரிசாக விளங்குபவர். சங்கராச்சாரிய சுவாமிகளால் சிற்பச் சக்கரவர்த்தி எனப் பட்டம் சூட்டப்பெற்ற சோமசுந்தரம் ஸ்தபதியின் மகன். சோமசுந்தரம் ஸ்தபதியே மாவிட்டபுரம் கந்தசுவாமி சிற்பத்தேரினை 1954ல் புனர்நிர்மாணம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புனர் நிர்மாணக் காலத்தில் இவருடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட இளைஞர் ஆ.தம்பித்துரையே இலங்கையின் புகழ்பூத்த பிற்கால ஸ்தபதி கலாகேசரி ஆ.தம்பித்துரையாகப் பரிணமித்தவர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

1932/11/18ம் திகதி பிறந்த லெட்சுமண ஸ்தபதி தமிழகத்தில் திரௌபதி அம்மன் தேரினை தனது கன்னிப்படைப்பாக நிர்மாணித்த பின்னர் ஈழத்திற்கு வருகை தந்தார். அனலைதீவு ஐயப்பன் (1980), கன்னாதிட்டி பத்திரகாளி (1982)ல் ஆகிய தேர்களுடன் மாவிட்டபுரம் கந்தசுவாமி திருமஞ்சத்தினையும் நிர்மாணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் நிர்மாணத்தினைப் பூர்த்தியாக்கவில்லை. திருநெல்வேலி செ.கந்தசாமி ஆசாரியே கன்னாதிட்டியையும் அராலி சி.அமரசிங்கம் மாவிட்டபுரத்தினையும் தொடர்ந்து பூர்த்தி செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தேர் அளவியல், அமைப்பியலில் நிபுணத்துவம் பெற்றவர்.

## மாயவரம் ச. ஏகாம்பரம் ஸ்தபதி.

இந்தியத் தமிழகத்தில் மாயவரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகநாதபிள்ளை ஏகாம்பரம் ஸ்தபதி தன் தந்தையாரையே குருவாகக் கொண்டு சிற்பக்கலையிற் பயிற்சி பெற்றவர். இவர் தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு வருகை தந்து கரணவாய் மூத்தவிநாயகர், நல்லூர் கந்தசுவாமி மஞ்சம், கொக்குவில் மஞ்சவனப்பதி போன்ற தலங்களில் தேர், மஞ்சத் திருப்பணி புரிந்த திருவிடை மருதூர் சி.சுப்பிரமணியம் ஸ்தபதியாரால் வளர்க்கப் பெற்றவர். அவரைத் 'தாத்தா' என்று செல்லமாக அழைக்கும் ஏகாம்பரம் "எனக்கு வித்தையைத் தந்தது அப்பா, புகழைத் தந்தது தாத்தா" என்று போற்றும் பரந்த மனப்பான்மை உள்ளவர்.

சென்னை எஸ். குமாரசாமி ஸ்தபதியார் வடிவமைத்த நயினாதீவு நாகபூஷணி (1957) தேரின் சிற்பியாக ஈழத்திற்கு வருகை தந்த ஏகாம்பரம் 1954ல் மாவிட்டபுரம் கந்தசுவாமி சித்திரத்தேரின் புனர் நிர்மாணத்திற்கு 8 குச்ச விக்கிரகங்களை செதுக்கியதன் மூலம் அறிமுகம் ஆனவர். சிற்பியாக இருந்து நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் (1967), பொன்னாலை வரதராஜப் பெருமாள் (1983) தேர்களை வடிவமைத்ததன் மூலம் ஸ்தபதியாக நிலைநிறுத்தினார்.

1974-1983 வரை நீண்ட காலம் நடைபெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேரில் பேரூர் மட்டம் வரை ஸ்தபதியாகப் பணியாற்றிய ஏகாம்பரம் செல்வச் சந்நிதி தேர் நிர்மாணத்திற்கான சிற்பங்களைச் செதுக்க வேண்டி பிரமதஸ்தபதி சோம.லெட்சுமணனின் அழைப்பினை ஏற்று பொன்னாலைத் தேர் நிர்மாணத்தினை தன் மகன் சுவாமிநாதனிடம் ஒப்படைத்து இங்கு வந்த பெருந்தகையாளர். தேர்ச் சிற்பக்கலையில் இந்தியாவிலேயே அதி சிறந்த கலைஞர் என்று பல சிற்பிகளாலும் பாராட்டப்பட்ட இவர் தனது மகன் சுவாமிநாதனை தேர்கலைச் சிற்பியாக வளர்த்து தற்போதைய தேர்க்கலை உலகிற்கு வழங்கியவர்.

ஏகாம்பரம் சந்நிதி தேரின் பெரிய அழகான முகப்புக் குதிரைகள் இரண்டினையும் சாரதியாகிய பிரம்மாவையும் ஆலய வரலாற்றியல் சிற்பங்களையும் செதுக்கியவர். இச் சிற்பங்கள் அழகியல் நோக்கில் 'தமிழகமும் காணாத அதிசிறந்த சிற்பங்கள்' என்று போற்றுவதற்குரிய அழகியல் பரிணாமங்களுமாய் பிரதிபலிப்பன.

## வாழ்மங்கலம் ச. தியாகராஜன்.

ஏகாம்பர ஸ்தபதியின் இளவல் *ச.தியாகராஜன்* நயினாதீவு நாகபூஷணி தேரில் தீர்வை செய்யும் உதவியாளனாக அறிமுகமாகி அனலைதீவு ஐயப்பன் (1980) தேரில் சிற்பியாகப் பரிணமித்தவர். கன்னாதிட்டி பத்திரகாளி, நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார், மாவிட்டபுரம் கந்தசுவாமி மஞ்சம் ஆகிய தேர், மஞ்ச நிர்மாணங்களில் சிற்பங்களைச் செதுக்கிய அனுபவத்துடன் சந்நிதி தேரில் பல விக்கிரகங்களை தனது சகோதரருடன் இணைந்தும் தனித்தும் உருவாக்கியவர்.'விரைவுத்திறன்' போற்றுவதற்குரியதாகும்.

## ஏனைய தமிழகக் கலைஞர்கள்.

நயினாதீவு நாகபூஷணி தேர் உட்பட பல தமிழகத் தேர்களில் சிற்பங்களை உருவாக்கிய சென்னை *எஸ். ரத்தினம் ஆசாரி*, மாமல்லபுரம் சிற்பக்கல்லூரியிற் பயின்ற *திரு. கிருஷ்ணமூர்த்தி* ஆகியோர் சிற்பிகளாகவும் *மாலை கண்டான் சோம.சின்னத்தம்பி, ச.சக்திவேல், செ.செல்வம், எஸ்.பி. ஆச்சாரியார்* ஆகியோர் தீர்வை செய்யும் உதவிக் கலைஞர்களாகவும் பணி புரிந்துள்ளார்கள்.

தேவகோட்டை *ப.அருச்சுனன், இராமையா, குணாளன், புஸ்பா, சிவா* யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனலைதீவு *சின்னத்துரை*, புங்குடுதீவு *சுப்பையா ஆசாரி, மூர்த்தி* ஆகியோர் தேர்க்கட்டுமானக் கலைஞர்களாகப் பணி புரிந்துள்ளனர்.

**மயிலிட்டி ச. ஜெயராஜா.**

மயிலிட்டி *ச. ஜெயராஜா* சந்நிதித்தேரின் மேல் விமானத்தினை நிர்மாணித்துள்ளார். இவர் கலாகேசரி ஆ. தம்பித்துரையிடம் சுதுமலை புவனேஸ்வரி (1974), குப்பிளான் கற்பகப் பிள்ளையார் (1975), மாத்தளை முத்துமாரி (1977) தேர்களில் பயிற்சி பெற்றவர். மயிலிட்டி கொழுவியன் கலட்டி விநாயகருக்கு (1979) வேசர தேர் நிர்மாணித்து ஸ்தபதியாக உயர்ந்ததுடன் யாழ்ப்பாணத்தில் பல தேர்களை வடிவமைத்த அனுபவத்துடன் இவ் விமானத்தினை சிறப்புற நிர்மாணித்தவர். 1986 ஐத் தொடர்ந்து கனடா சென்று யாழ்ப்பாணத்துத் தேர்க்கலையின் சிறப்பினைப் பரப்பி நிற்பது குறிப்பிடத்தக்கது.

**ஏனைய தொழில்நுட்பக்கலைஞர்களும் நிபுணர்களும்.**

தேர்முட்டிக்கான அடிப்படைத் திட்டமிடலில் பொறியியலாளர்களான இடைக்காடு *திரு.ம. நமசிவாயம்,* தொண்டைமானாறு *க. சீனிவாசகம்,* படவரைஞர் *அரியராசா* ஆகியோரும் தேர்முட்டி நிர்மாணிப்பதில் வல்லை *சிவலிங்கம்* மேஸ்திரி அவர்களும் ஈடுபட்ட தொழில் நிபுணர்களாவர்.

தேருக்கான இரும்பு வேலைகளை உடுப்பிட்டியைச் சேர்ந்த *திரு. அப்புத்துரை ஆசாரி, செல்வம் ஆசாரி, கந்தசாமி, யாழ்.வரதன்* இன்ஜினியரிங் நிறுவனத்தார் ஆகியோரும் தேருக்கான மரங்கள் அரிந்து பதப்படுத்துதலில் உடுப்பிட்டியைச் சேர்ந்த *திரு. மகாலிங்கம், திரு. கு. வினாசி, திரு. சுந்தரம், திரு.சந்திரலிங்கம், திரு.கருணைவேல்* ஆகியோரும் பணியாற்றியுள்ளனர்.

## 7.எரியூட்டல்.

முன்னேறிய சமூகம் ஒன்றின் பண்பாட்டு மையங்களாக அவ்வப் பண்பாட்டிற்கேயுரிய சமய, வழிபடு நிறுவனங்களே விளங்கியமை வரலாற்று நியதி. மேலைத்தேய கிறிஸ்தவமும் கீழைத்தேய இந்து சமயமும் தகுந்த உதாரணங்கள். ஒரு சமூகத்தை அல்லது இனத்தை ஒடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் தோறும் அச்சமூகத்திற்குரிய ஆலயங்கள் நிர்மூலமாக்கப்பட்டமை மேற்படி நியதியின் வெளிப்பாடாகும். இலங்கை இந்துப் பண்பாட்டில் அடித்தள வழிபாட்டு நிலையில் அதிக செல்வாக்குச் செலுத்தி நிற்கும் செல்வச் சந்நிதி முருகன் தேர் நீண்ட நெடும்பாரம்பரியத்தில் பண்பாட்டழிவுக் கொள்கைக்கு இலக்காகிய இறுதிப் பெரும் நிகழ்வாகும்.

1985ம் ஆண்டின் ஆரம்பத்தில் தொண்டைமானாற்றின் மேற்குப் பகுதியில் முகாமிட்ட இலங்கை இராணுவம் ஆலயத்தின் வழமையான செயற்பாடுகளைப் படிப்படியாகக் குறைத்தது. பதற்றமானதோர் சூழ்நிலை உருவாகியது. ஈழத்துத் தேர்க்கலை வரலாற்றின் இருண்ட அத்தியாயம் ஒன்று 21.04.1986ம் திகதி செந்தீயால் எழுதப்பட்டது.

இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் அமெரிக்க யுத்த விமானங்கள் யப்பானிய ஹிரோசீமா-நாகசாகியில் அணுக்குண்டுத் தாக்குதல்களை நடாத்தியபோது எழுந்த புகைமண்டலத்தை நினைவூட்டும் வகையில் உலகத்தமிழர் வரலாற்றிலேயே தனித்துவம் நிறைந்ததோர் தேர்க்கலைக் களஞ்சியமாகத் திகழ்ந்த செல்வச் சந்நிதி முருகன் தேர் செந்தேராக எரிந்து கருந்தேராகப் புகைந்தது. 4/5 மைல் தொலைவிலுள்ளோர் எல்லாம் நேரிற் கண்டதன் மூலம் தமது பண்பாட்டின் மூலவேர் புகைவதனை அறிந்தும் உணர்ந்தும் வேதனைப்பட்டனர்.

போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையின் பல புராதன சைவாலயங்கள் தகர்க்கப்பட்ட நிகழ்விற்குப் பின்னர் இலங்கை இந்து வரலாறு கண்ட மாபெரும் கலையழிவு நிகழ்வாக செல்வச்சந்நிதி முருகன் தேர் எரியூட்டல் அமைந்தது. இடிக்கப்பட்ட சைவாலயங்கள் பலவற்றினதும் கலையமைவுக்கேற்ப புதியதாக அவற்றினை நிர்மாணிக்க முடியும். ஆனால் இந்துக் கலையுலகில் தேர் நிர்மாணத்திலும் தேர்ச்சிற்ப வடிவமைப்பிலும் இந்தியாவிலேயே அதன் உயரிய எல்லையைத் தொட்டு நின்ற கலைமரபுகளின் பரிணமிப்பாக விளங்கிய செல்வச்சந்நிதி முருகன் தேர் போன்று இன்னொன்றினை இந்துக் கலைவரலாறு வருங்காலத்திலும் காண்பதென்பது வெறும் பகற்கனவு என்பதில் ஐயமில்லை.

## 8 – வரலாற்றில் செல்வச்சந்நிதி தேர் ஆய்வும் மதிப்பீடும்.

இந்திய அல்லது தமிழக கலைப்பாணியில் யாழ்ப்பாணத்தில் அமைந்த தேர்களில் மிகப் பிரம்மாண்டமானதாக விளங்கிய செல்வச் சந்நிதி தேர் ஈழத்துக் கலை வரலாற்றில் பெறும் இடம் பற்றி சிறிது நோக்குதல் அவசியமாகின்றது. ஏனெனில் தற்போது காண்பதற்கு அதன் பருப்பொருள் எச்சங்களாகிய இரும்பு அச்சுக்கள், சக்கரங்களின் மேலுறைகள் தவிர்ந்த எதுவுமற்ற நிலையில் அக்னிதேவனுடன் சங்கமித்த செந்தேர் ஒன்றினை உரிய வகையில் மதிப்பீடு செய்ய எவராலும் முடியாது என்பது உண்மைதான். யாழ்ப்பாணத்து கலை வரலாற்றாசிரியர்கள் பலருக்கும் உள்ள பல அவதானிப்புகளுக்கு மேலாக இத்தேர் பற்றிய சிறப்பம்சங்களைப் பதிந்து கொள்வது கலைவரலாற்றுக் கடமையாகும்.

தமிழக பாணியிலமைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி சிற்பத்தேர் போர்த்துக்கேய, ஒல்லாந்தர்கால இறுதியில் சமய சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் 1782ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. சுழிபுரம் பறாளாய் ஈசுரவிநாயகர் - சுப்பிரமணியர் ஆலயங்களில் இரு மூல தெய்வங்களும் பவனி வந்த சிற்பத்தேர் நாகர மரபில் 1840 அளவில் உருவாகிறது. நாகர முகபத்திர மரபிலமைந்த இத்தேர் ஆறு சில்லுகளுடன் கூடிய தேராக விளங்கியது.

அதனை ஒத்த அமைப்பாக மாதகல் நுணசை முருகன் தேர் அமைந்தது. ஆயினும் சிற்பத்திறன் சற்று குறைவாகவே விளங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலகட்டத்தின் பின்னர் தமிழகத்திலிருந்து வருகை தந்து யாழ்ப்பாணத்திற் பணியாற்றிய திருவிடைமருதூர் சுப்பிரமணியம் ஸ்தபதி கரணவாய் மூத்தவிநாயகருக்கு நாகரமரபில் தேர் செய்த போதிலும் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகனுக்கு வடிவமைத்த தேரே ஓர் பெரும் எழுச்சிக்குரியதாயிற்று. மேல் விமானம் நிரந்தரமாக இணைக்கப்பட்ட சிற்பத்தேராகவும் மகோற்சவத்திற்கு உரிய சிற்பத்தேர் என்று சிற்ப இலக்கணம் கூறும் வழிகளைத் தன்னகத்தே கொண்டதாகவும் இது விளங்குகின்றது.

நயினாதீவு நாகபூஷணி தேர் (1957) சகல தேர் இலக்கணங்களும் கொண்டமைந்த போதிலும் திராவிட எண்கோண வடிவமைப்பினைக் கொண்டதாக விளங்கியது.

திருவிடைமருதூர் இரா.கோவிந்தராஜு (இவர் பிற்காலத்தில் 1980களில் திருப்பதி தேவஸ்தானத்தில் ஆஸ்தான ஸ்தபதியாக விளங்கியவர்.) நிர்மாணத்த நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார் (1963) நல்லூர் கந்தசுவாமி (1964) நல்லூர் கைலாச நாத பிள்ளையார் (1967) ஆகியன திராவிட எண்கோண வடிவமைப்பிலானவை. நல்லூர் இலக்கண மரபினை ஏற்காத ஆகமமுறை சாராத முருகனுக்கு அமைக்கப்பெற்ற தேராகும்.

அதிலும் 'பழைய தேரின் மாதிரியாக' அமைக்க வேண்டுமென்ற ஆலய நிர்வாகத்தினர் விருப்பிற்கிணங்க தனது ஆற்றலை மட்டுப்படுத்த வேண்டிய நிலை கோவிந்தராஜனிற்கு இங்கு ஏற்பட்டது.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் ஆட்சியில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியின் போது தமிழகத்திலிருந்து கலைஞர்கள் எவரும் யாழ்ப்பாணம் வருகை தர முடியாததோர் நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. இலங்கை கலைஞர்களை ஊக்குவிக்கும் எண்ணம் இங்கு அடிப்படையாகும். ஆயினும் இந்து கோவிற் கலைகளைப் பொறுத்தளவில் இச்சந்தர்ப்பத்தை தக்கவாறு பயன்படுத்தி உயரும் நிலையில் இலங்கைக் கலைஞர்கள் இருக்கவில்லை. ஆகவே பாரிய ஆலய நிர்மாணங்களுக்காயினும் தேர் நிர்மாணங்களுக்காயினும் தமிழகத்தையே மீளவும் எதிர்பார்க்க வேண்டிய நிலை இயல்பாக நிலவியது.

அனலைதீவு ஐயப்பனுக்கு தேர் வடிவமைக்கவென்று தமிழகத்திலிருந்து அழைக்கப்பெற்ற *சோம.லெட்சுமணஸ்தபதி* குழுவினரே இந்நிலையில் அரச அங்கீகாரத்துடன் யாழ் வருகை தந்த முதலாவது தேர்க் குழுவினராவர். இவருடன் சிற்பியாக வாழ் மங்கலம் *ச.தியாகராஜன்* அவர்கள் வருகை தந்திருந்தார். தொடர்ந்து பொன்னாலை வரதராசருக்கு தேரமைக்க *ச. ஏகாம்பரமும்* வந்திருந்தார். இவர்களில் *ச.ஏகாம்பரம்* நீர்வேலி விநாயகருக்கு 1967ல் திராவிட மரபில் சிற்பதேர் வடிவமைத்திருந்த போதிலும் இது சிற்பங்களுக்காக மட்டுமே சிறப்புப் பெற்றிருந்தது.

பொன்னாலை *ஏகாம்பரத்தின்* வெளியேற்றத்துடன் *ஏ.சுவாமிநாதன் சிதம்பரம்* ஆகிய 2 ஸ்தபதிகளை மேலதிகமாகக் கொண்டிருந்த காரணத்தினால் பிரமாணச் சிறப்பினை இழக்கும் நிலை ஏற்படலாயிற்று.

இந்நிலையில் யாழ் மாவட்ட ஆலயங்களிலேயே பொருளாதார வளம் மிகுந்த ஆலயங்களில் ஒன்றாகிய செல்வச் சந்நிதி முருகன் தேர்த்திருப்பணிச் சபையினர் இலங்கையிலேயே மிகவும் பிரம்மாண்டமான சிற்பத்தேர் ஒன்றினை வடிவமைக்க விரும்பினர். தேர் இலக்கணத்தில் உச்ச எல்லையைத் தொட்டு நின்ற *சோம. லெட்சுமணஸ்தபதி* நிர்மாணத்தினை பொறுப்பெற்றமை புதிய தோர் அத்தியாயத்தை தோற்றுவித்தது.

தேர்ச் சிற்பங்களில் தலைசிறந்த இரு கலைமரபுகளை பிரதிபலித்து நின்ற *ச.ஏகாம்பரமும், ச.தியாகராஜனும்* பிரதமஸ்தபதி *லெட்சுமணன்* தலைமையில் இணைகின்றமை இலங்கைக்கலை வரலாற்றில் முன்னும் பின்னும் கண்டு கொள்ள முடியாததோர் 'கலைச் சங்கமம்' எனலாம்.

அதிலும் ஏகாம்பரம் நயினாதீவு நாகபூஷணி, மாவிட்டபுரம் கந்தசுவாமி புனர்அமைப்பு, வண்ணைக் காமாட்சி (1971), தேர்சிற்பங்கள் உருவாக்கியதுடன் நீர்வேலி அரசகேசரி தேர் ஸ்தபதியாக அமர்ந்து உருவாக்கியவர். சிற்பச்செதுக்கும் திறனுக்கு புகழ்பெற்ற நீர்வேலி, பொன்னாலை தேர்களின் ஸ்தபதியாகவும் அமர்ந்து உருவாக்கியவர்.

அத்தகைய ஒருவர் ஸ்தபதி பதவியை தூக்கி எறிந்த நிலையில் பிறிதோர் தலைமை ஸ்தபதியின் கீழ் இணைந்து பணியாற்றும் நிலைமை ஒன்று உருவாகின்றது என்றால் அத்தகைய நிலைமையின் விளைவு எத்தகையதாக இருக்கும் என்பது சாதாரண வார்த்தைகளில் வரையறை செய்ய இயல்வது ஒன்றல்ல.

அடிப்படை வடிவமைப்பு, முகபத்திர மடக்கை மீட்பு, அடுக்குமானச் சிறப்பு, உறுதியான கட்டுமானம், சிற்பச்செழுமை மிகுந்த தளத்தோற்றம், செதுக்குத்திறன் மிகுந்த சிற்பங்கள் , ஆலய பௌராணிக வெளிப்பாட்டுச் சிற்பங்கள், உயிரோட்டம் நிறைந்த பெரிய முகப்புக் குதிரையும் சாரதியாகிய பிரம்மாவும் ஆகிய அம்சங்களில் இலங்கை வரலாறு இது வரையிற் கண்டிராத ஓர் உயரிய பரிணமிப்பாக விளங்கியது செல்வச்சந்நிதி தேர்.

தமிழகத்திலுள்ள தலைசிறந்த தேர்களாகக் கருதப்படும் திருவாரூர் தியாகராயர் தேர், திருவிடைமருதூர் தேர்களுடன் மேற்கூறிய அம்சங்களில் சிற்ப இலக்கண அடிப்படையில் நோக்கும் போது செல்வச்சந்நிதி தேர் இலங்கை -தமிழக கலை வரலாற்றில் ஓர் உயரிய 'கலைமுகிழ்ப்பு' என்பதைக் கண்டு கொள்ள முடியும். இது யாழ்ப்பாணத்து அறிஞர்களின் புகழ்ச்சியுரையன்று. தமிழகத் தேர்க்கலையை ஒப்பு நோக்கிய யாழ்ப்பாணத்து கலை ஆய்வாளன் ஒருவனின் சத்தியதரிசனம்.

# நிறைமுகம்

இலங்கையின் இந்து சமய, பண்பாட்டு நிலையில் சிறப்புப் பெற்று விளங்கி அவைதிக நெறியினரின் கலை அழிவுக் கொள்கைக்கு இலக்காகி செந்தேராகிய தொண்டைமானாறு செலவச்சந்நிதி முருகன் தேர் பற்றிய ஆய்வு நோக்கிலான இந்நூலினின்று தெரியவரும் செய்திகளைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

1. "பொது அறிமுகம்"என்னும் முதலாவது இயலில் செல்வச் சந்நிதி அமைவிடம் பற்றிய அறிமுகத்துடன் தொண்டைமானாறு வரலாறு விரிவாக அலசப்பெற்று 'சந்நிதி' என்ற சொல்லுக்குப் பொருள்விளக்கம் காண முற்படுகின்றது. இறுதியில் ஆலய வரலாறு சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது.

2. "வரலாற்றுப்பின்னணி" என்னும் இரண்டாவது இயல் செல்வச் சந்நிதி முருகன் தேர் உருவாக்கப்பட்ட வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்துள்ளது.

3. "தேர்க்கலை' என்னும் மூன்றாம் இயல் செல்வச் சந்நிதி முருகன் தேரின் அமைப்புச் சிறப்புக்களை எல்லாம் நுணுக்கமாக விபரித்தும் பொருத்தமான ஏனைய தேர்களுடன் ஒப்பு நோக்கியும் ஆராய்ந்துள்ளது.

4. "தேர்ச்சிற்பம்" என்னும் நான்காம் இயல் செல்வச்சந்நிதி முருகன் தேரில் அமைந்த சிற்பங்களின் சிறப்பியல்புகளைத் திறனாய்வு நோக்கில் நுணுகி ஆராய்ந்துள்ளதுடன் ஏனைய தேர்ச்சிற்ப மரபுகளுடன் ஒப்பு நோக்கியும் ஆராய்ந்துள்ளமை தெளிவாகும்.

5. "தேரோவியம்" என்னும் ஐந்தாம் இயல் செல்வச் சந்நிதி முருகன் தேரில் அமைந்த ஓவியக்கலையின் சிற்ப்பியல்புகளை நுணுகி விபரித்துள்ளது.

6. "கலைஞர்கள்" என்னும் ஆறாம் இயல் செல்வச் சந்நிதி முருகன் தேர் நிர்மாணிப்புப் பணிகளில் ஈடுபட்ட கலைஞர்களை வரலாற்று நோக்கில் அவர்கள் உருவாகிய பாரம்பரிய அடிப்படையில் அறிமுகம் செய்துள்ளது.

7. "எரியூட்டல்" என்னும் ஏழாம் இயல் செல்வச் சந்நிதி முருகன் தேர் எரியூட்டல் பெற்ற நிகழ்வினைச் சுருக்கமாக விபரித்துள்ளது.

8. "வரலாற்றில் செல்வச் சந்நிதி தேர் : ஆய்வும் மதிப்பீடும்" என்னும் எட்டாவது இயல் இத்தேர்-சிற்பம்-ஓவியம் ஆகிய கலை அம்சங்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள ஏனைய தேர்களுடன் ஒப்பு நோக்கி இதன் தனித்துவத்தினை திறனாய்ந்துள்ளது.

**தொகுத்து நோக்கின் ஆய்வு நோக்கிலமைந்த இந்நூல் இலங்கையில் இந்து சமய, பண்பாட்டு நிலையில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தி நிற்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனுக்கு அமைந்தும் எரிந்தும் இந்துக்கள் மனத்தில் அழியாத வடுவாக விளங்கும் சிற்பத்தேர் பற்றி சிற்ப இலக்கண அடிப்படையில் இந்துக்கலைக் கொள்கையின் பின்னணியில் சிறப்புற விளக்கியுள்ளமை புலனாகும்.**

## இணைப்பு

### 1. படங்களின் விபரப்பட்டியல்.

1. ஆலயத்தின் தற்போதைய தோற்றம், செல்வச்சந்நிதி.
2. சிற்பத்தேரின் அழகிய தோற்றம்.
3. சாரதி பிரம்மாவும் தேரின் பகுதித் தோற்றமும்.
4. மணிமண்டபத்தின் அழகிய தோற்றம்.
5. தேர் மண்டபத்தின் தற்போதைய தோற்றம்.
6. எரிந்த தேரில் எஞ்சிய இரும்புப் பாகங்கள்.
7. செல்வச் சந்நிதி முருகன் தேர் மாதிரி வரைபடம்.
8. 'நர்த்தன விநாயகர்' தேர்ச்சிற்பம்.

9. 'பிரணவத்தினுள் சிவன் - பார்வதி – முருகன்', தேர்ச்சிற்பம்.

10. 'மூலஸ்தானத் தோற்றம்', தேர்ச்சிற்பம்.

11. 'வைரவர் ஆலயத் தோற்றம்', தேர்ச்சிற்பம்.

12. 'கீதோபதேசம்', தேர்ச்சிற்பம்.

13. 'தலவிருட்ச பூவரசும் நாகதம்பிரான் ஆலயமும்', தேர்ச்சிற்பம்.

14. 'வீரவாகு தேவர் வல்லியாற்றங்கரையில் வேல் பிரதிஸ்டை', தேர்ச்சிற்பம்.

15. 'வியாழபகவான் கந்தரூபனுக்கு சாபமிடல்', தேர்ச்சிற்பம்.

16. 'அகத்தியர் சிகண்டிக்கு கதிர்காம முருகன் சிறப்பினை உரைத்தல்', தேர்ச்சிற்பம்.

17. 'சிகண்டியும் ஜராவசு சாபவிமோசனமும்', தேர்ச்சிற்பம்.

18. 'ஜராவசு கதிர்காமப்பயணம்', தேர்ச்சிற்பம்.

19. 'கதிர்காம முருகன் ஜராவசுவிற்கு சந்நிதிப்பெருமை சொல்லல்', தேர்ச்சிற்பம்.

20. ''ஜராவசு பூவரசு நிழலில் வழிபடுதல்', தேர்ச்சிற்பம்.

21. 'கதிர்காமருக்கு முருகன் கரைக்கு வருமாறு பணித்தல்', தேர்ச்சிற்பம்.

22. 'சந்நிதியின் பூர்வீகச்சிறப்புப் பற்றி முருகன் கதிர்காமருக்குச் சொல்லல்', தேர்ச்சிற்பம்.

23. 'கதிர்காமரை முருகன் கதிர்காமத்திற்கு அழைத்துச் செல்லல்', தேர்ச்சிற்பம்.

24. 'கதிர்காமப் பூசைகளைக் கதிர்காமர் அவதானித்தல்',தேர்ச்சிற்பம்.

25. 'கதிர்காமருக்கு முருகன் வேல் வழங்குதல்', தேர்ச்சிற்பம்.

26. '63 இலைகளில் உணவு படைத்தலும் வாய்கட்டிப் பூசை செய்தலும்', தேர்ச்சிற்பம்.

27. தேர்ச்சிற்பிகள், இடமிருந்து வலமாக :ஸ்தபதி சோம. லெட்சுமணன், ச. ஏகாம்பரம் ஸ்தபதி, எஸ். இரத்தினம் ஆசாரி, ச. தியாகராஜன்ஆசாரி.

28. தேர்த்தளத்தின் அழகியதோற்றம்.

29. முருகனும் கதிர்காமரும் கலந்துரையாடியதாக கருதப்படும் ஆலயவாயிற் படியின் இன்றைய தோற்றம்.

30. தமிழக பாணியில் திருவாரூர் தியாகராஜர் இயற்தேர்த் தோற்றம்.

## 2. துணை நூற்பட்டியல்.


1. *அம்பிகைபாகன், வே.*
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களில் தேர் : ஓர் ஆய்வு.
யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிக சிறப்புப்பட்ட இறுதித் தேர்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரை.
1989 (1990) பிரசுரிக்கப்படாதது.

2. *சண்முகதாஸ், அ.பேராசிரியர் கலாநிதி, மனோன்மணி சண்முகதாஸ்.*
ஆற்றங்கரையான்,
வராவொல்லை வெளியீடு: 3
1989, பருத்தித்துறை.

3. *துரைரத்தினம் து.(தொகுப்பாசிரியர்)*
வெள்ளோட்டம்,
செல்வச்சந்நிதி முருகன்சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர்,
1984, தொண்டைமானாறு.


4. *தெய்வேந்திரஐயர் வி.(பதிப்பாசிரியர்)*
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயசிறப்புமலர்
2000, தொண்டைமானாறு

## 3.படங்கள்




1.ஆலயத்தின் தற்போதைய தோற்றம், செல்வச்சந்நிதி

I



உ. சிற்பத்தேரின் அழகிய தோற்றம்



3. சாரதி பிரம்மாவும் தேரின் பகுதித் தோற்றமும்

XII




4. மணிமண்டபத்தின் அழகிய தோற்றம்




5. தேர் மண்டபத்தின் தற்போதைய தோற்றம்


6. எரிந்த தேரின் எஞ்சிய இரும்புப்பாகங்கள்
VI




7. செல்வச் சந்நிதி முருகன் தேர் மாதிரி வரைபடம்




8. 'நர்த்தன விநாயகர் தேர்ச்சிற்பம்'




9. 'பிரணவத்தினுள் சிவன் - பார்வதி - முருகன்' தேர்ச்சிற்பம்



10. 'மூலஸ்தானத் தேற்றம்', தேர்ச்சிற்பம்




11. 'வைரவர் ஆலயத் தோற்றம்', தேர்ச்சிற்பம்




12. 'கீதோபதேசம்', தேர்ச்சிற்பம்



13. 'தலவிருட்ச பூவரசும் நாகதம்பிரான் ஆலயமும்', தேர்ச்சிற்பம்




14. [illegible]




15. 'வியாழபகவான் கந்தருபனுக்கு சாபமிடல்', தேர்ச்சிற்பம்



16. 'அகத்தியர் சிகண்டிக்கு கதிர்காம முருகன் சிறப்பினை உரைத்தல்', தேர்ச்சிற்பம்




17. 'சிகண்டியும் ஐராவசு சாபவிமோசனமும்', தேர்ச்சிற்பம்




18.' ஐராவசு கதிர்காமப் பயணம்', தேர்ச்சிற்பம்



19.'கதிர்காம முருகன் ஐராவசுவிற்கு சந்நிதிப்பெருமை
சொல்லல்', தேர்ச்சிற்பம்



20. 'ஐராவசு பூவரசு நிழலில் வழிபடுதல்', தேர்ச்சிற்பம்




21. 'கதிர்காமருக்கு முருகன் கரைக்கு வருமாறு பணித்தல்',
தேர்ச்சிற்பம்



22. 'சந்நிதியின் பூர்வீகச் சிறப்புப் பற்றி முருகன் கதிர்காமருக்குச் சொல்லல்', தேர்ச்சிற்பம்




**23.'கதிர்காமரை முருகன் கதிர்காமத்திற்கு அழைத்துச் செல்லல்', தேர்ச்சிற்பம்.**



24. 'கதிர்காமப் பூசைகளைக் கதிர்காமர் அவதானித்தல்,
தேர்ச்சிற்பம்.




25.'கதிர்காமருக்கு முருகன் வேல் வழங்குதல்', தேர்ச்சிற்பம்




**26. '63 இலைகளில் உணவு படைத்தலும் வாய்கட்டிப் பூசை செய்தலும்', தேர்ச்சிற்பம்**




27.தேர்ச்சிற்பிகள் இடமிருந்து வலமாக: ஸ்தபதி சோமலெட்சுமணன், ச.ஏகாம்பரம், ஸ்தபதி.எஸ்.இரத்தினம், ஆசாரி.ச.தியாகராஜன் ஆசாரி



28. தேர்த்தளத்தின் அழகிய தோற்றம்



29. முருகனும் கதிர்காமரும் கலந்துரையாடியதாக கருதப்படும் ஆலயவாயிற் படியின் இன்றைய தோற்றம்.



30. தமிழக பாணியில் திருவாரூர் தியாகராஜர் இயற்தேர்த் தோற்றம்



## இந்நூலாசிரியர் பற்றி

இந்நூலாசிரியர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மயிலிட்டி வடக்கு காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் சிறப்புப்பட்டத்தைப் பெற்ற இவர், அதே துறையில் உதவி விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர். தற்பொழுது வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் முறைசாராக் கல்வி செயல் திட்ட அலுவலகராகப் பணியாற்றி வருகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணி (M.Phill) பட்டத்திற்காக **"யாழ்ப்பாணத்து இந்து ஆலய தேர்ச்சிற்பங்கள்"** பற்றி விரிவாக ஆராய்ந்து வருகின்றார். **கலாகேசரியும் தேர்ச்சிற்பக் கலையும்** (1994), **முறைசாராக் கல்வியில் புதிய பயிற்சி நெறிகளை அறிமுகம் செய்தல் ஓர் எண்ணக்கரு** (1999), **கலாகேசரி ஆ.தம்பித்துரை** (2000) ஆகிய நூல்களை வெளியீடு செய்துள்ள இவரின் நான்காவது நூலே செல்வச்சந்நிதி தேர்த்திறன் ஆகும். செல்வச்சந்நிதி எழில் மிகு சித்திரத் தேரின் அமைப்பினை இந்நூல் விபரிக்கிறது.

தமிழில் தனித்தேர் ஒன்று பற்றிய முதலாவது நூல் இதுவாகும். இந்து விக்கிரகவியல், தெய்வீகவியல், சிற்பக்கலை, கோயில் கட்டிடக்கலை, நாடகக்கலை போன்றவற்றில் அதிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட இவர் **சக்தியின் வடிவங்கள்** என்னும் சிறந்ததோர் ஆய்வு நூலினை அடுத்து வெளியிடவுள்ளார்.

இந்துக்கலை ஆய்வுலகில் கலாயோகி ஆனந்தக்குமாரசாமி, கலைப்புலவர்.க.நவரத்தினம், கலாகேசரி ஆ.தம்பித்துரை ஆகியோரைத் தொடர்ந்து இலங்கை எழுத்துத் துறையில் பெயர்சொல்லத்தக்க ஓர் வளர்ந்து வரும் பன்முகக் கலைஞனாக இந்நூலாசிரியர் விளங்குகிறார் என்பதற்கு இந்நூல் ஒன்றே போதுமானதாகும். நூலாசிரியர் மேலும் இந்நூலாய்வு முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு உழைத்து இலங்கைத் திருநாட்டின் கலைப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அரும் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு.பரராஜசிங்கம் கணேசலிங்கம்
(இந்நூல் சிறப்புரையில்)

வெளியீடு:
காங்கேயன் கலைக்கோட்டம்,
6, போக்காலை வீதி, உடுப்பிட்டி.